இதழ் 1 • மார்ச் 2017

# LEISA INDIA

*Magazine on Low External Input Sustainable Agriculture*
*Compilation of selected translated articles into Tamil*

## லீசா இந்தியா
## தமிழ் சிறப்பிதழ்



# லீசா இந்தியா
# தமிழ் சிறப்பிதழ்

This issue in Tamil is a translated version of LEISA India magazine. This includes selected articles from LEISA India, originally published in English.

Address : AME Foundation
No. 204, 100 Feet Ring Road,
3rd Phase, Banashankari 2nd Block, 3rd Stage,
Bangalore - 560 085, India

Tel: +91-080- 2669 9512, +91-080- 2669 9522

Fax: +91-080- 2669 9410

E-mail: leisaindia@yahoo.co.in

LEISA India
Chief Editor : K.V.S. Prasad
Managing Editor : T.M. Radha

*Translated by*
N. Lalitha Sakthivel

*Translation coordination*
Poornima

*Administration*
Rukmini G. G.

*Design and Layout*
M.S. Vasanth Christopher

*Printing*
L.S. Graphic Prints, Chennai

*Cover photo*
Women in cultivation of Cumbu Napier (CN Co4) fodder grass in Attapallam village
Photo: J. Krishnan, AMEF

*Different editions*

- Regional Editions
  Telugu, Hindi, Kannada, Marathi, Punjabi and Oriya
- Farming Matters
  The Global edition in English
- LEISA Revista de Agroecologia
  The Latin American edition in Spanish
- LEISA India
  The Indian edition in English
- AGRIDAPE
  The West African edition in French
- Agriculturas, Experiencias em Agroecologia
  The Brazilian edition in Portuguese

The editors have taken every care to ensure that the contents of this magazine are as accurate as possible. The authors have ultimate responsibility, however, for the content of individual articles.

The editors encourage readers to photocopy and circulate magazine articles.

Supported by MISEREOR,
Published by AME Foundation

**லீசா** என்பது குறைந்த வெளியிடு பொருள் மற்றும் நிலைத்த வேளாண்மை என்பதன் சுருக்கமாகும். சுற்றுச்சுழலுக்கு உகந்த வழிகளில் உற்பத்தியையும், வருமானத்தையும் பெருக்க விரும்பும் உழவர்களுக்கு தொழிற்நுட்ப மற்றும் சமூக ரீதியிலான வாய்ப்புகளை உள்ளடக்கியதாகும். லீசா என்பது உள்ளூர் வள ஆதாரங்கள் மற்றும் இயற்கையின் போக்குகளை அளவுடன் பயன்படுத்தி தேவைப்படும் போது பாதுகாப்பான அளவு வெளியீடு பொருட்களை திறன்பட கையாள்வதாகும். லீசா என்பது ஆண் மற்றும் பெண் உழவர்களை, அந்த சமூகத்தை சுயபலம் மிக்கவர்களாகவும், சக்தி மிக்கவர்களாகவும் மாற்றி அதன்மூலம் அவர்களின் எதிர்காலத்தை தங்கள் சொந்த அறிவு, திறமை,மதிப்பீடு, கலாச்சாரம் மற்றும் அமைப்புகளை அமைக்க உதவுவதாகும். லீசா என்பது மாறிவரும் சூழல்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப உழவர்கள் மற்றும் இதர பங்குதாரர்களின் திறமைகள், பங்கேற்பு அணுகுமுறைகள் மூலம் பலப்படுத்துவதாகும். லீசா என்பது பாரம்பரிய அறிவையும், அறிவியல் பூர்வமான அறிவையும் இணைத்து அதன்மூலம் கொள்கை உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி எதிர்கால வளர்ச்சிக்கு சாதகமான சூழலை உருவாக்குவதாகும். லீசா என்பது ஒரு கருத்து, ஒரு அணுகுமுறை மற்றும் விவேகமான செய்தி.

**மிசௌரியர்** என்பது வளர்ச்சி ஒத்துழைப்பிற்காக, ஜெர்மனி நாட்டில் உள்ள கத்தோலிக்க பாதிரியார்களால் 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் நிறுவனமாகும். மிசௌரியர் கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏழ்மை ஒழிப்பதற்கான போராட்டத்தில் தன்னை அர்பணித்து பணியாற்றி வருகிறது. மதம், நாகரீகம், பாலினம் என்ற எந்த வேறுபாடில்லாமல் மனித குலத்தின் தேவைக்கு தனது உதவியை அளித்து வருகிறது.

ஏழை மற்றும் பின்தங்கிய மக்கள், தாங்களாக துவக்கும் எந்த ஒரு முயற்சிக்கும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று நம்புகிறது. உள்ளூர் கூட்டாளிகளுடன், குறிப்பாக கிருத்துவ கோயில்களோடு தொடர்புடைய நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், சமூக இயக்கங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றோடு இணைந்து பணியாற்றுவதை விரும்புகிறது. பயனாளிகளோடு இணைந்து, அதன் கூட்டாளிகள் உள்ளூர் வள மேம்பாட்டு முறைகளில் உதவியும், திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். இவ்வழியாகவே, மிசௌரியர் தனது கூட்டாளிகளுடன் இணைந்து தொடர்ச்சியாக மாறிவரும் சவால்களை எதிர்கொள்கிறது. www.misereor.de; www.misereor.org

**ஏ.எம்.இ பவுண்டேஷன்** குறைந்த வெளியிடு பொருள் மூலம் இயற்கை வள ஆதாரங்கள் மேலாண்மைக்காக பாரம்பரிய அறிவையும், புதிய கண்டுபிடிப்பு தொழிற்நுட்பங்களையும் ஒன்றிணைத்து நிலைத்த வாழ்வாதாரப் பணிகளை பெருக்குவதில் ஈடுபட்டு வருகிறது. ஏ.எம்.இ பவுண்டேஷன் வேளாண்மையில் மாற்றுகளையும், அறிவையும் பெருக்குவதிலும், பயிற்சிகள் அளிப்பதிலும், வளர்ச்சி பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவதிலும், அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும், தக்காண பீடபூமி பகுதிகளில் சிறு குறு உழவர்கள் மத்தியில் பணியாற்றி வருகிறது.

**ஏ.எம்.இ நிறுவனம்** ஆர்வமுள்ள விவசாயக் குழுக்களுடன் பல கிராமங்களில் மாற்று விவசாய முறைகளை பெருக்கவும், நடைமுறைப்படுத்தவும் பணி செய்து வருகிறது. இந்த பகுதிகள் இயற்கை வேளாண் முறைகளை கொண்டுவர முயற்சிக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தி கொண்டு வரும் தன்னார்வக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு கற்றுக்கொள்ளும் இடங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. www.amefound.org

*அறக்கட்டளையின் அறங்காவலர்கள்:*

**திரு. சிரஞ்ஜீவ் சிங்,** IAS - *தலைவர்*
**முனைவர். வித்தல் ராஜன்** - *உறுப்பினர்*
**முனைவர். எம். மஹாதேவப்பா** - *உறுப்பினர்*
**முனைவர். என்.ஜி. ஹெக்டே** - *உறுப்பினர்*
**முனைவர். டி.எம். தியாகராஜன்** - *உறுப்பினர்*
**பேராசிரியர். வி. வீரபத்ரைய்யா** - *உறுப்பினர்*
**திரு. பி.கே. சிவராம்** - *பொருளாளர்*
**முனைவர். ஏ. ராஜன்னா** - *உறுப்பினர்*
**முனைவர். வெங்கடேஷ் தகத்** - *உறுப்பினர்*
**முனைவர். ச்மிதா ப்ரேம்சந்தர்** - *உறுப்பினர்*
**திரு. கே.வி.எஸ். பிரசாத்** - *செயல் இயக்குனர்*

# பொருளடக்கம்

இதழ் 1 • மார்ச் - 2017

**4 கிராமத்தின் நேரடி நிகழ்ச்சி**

***நல்ல தொழில்நுட்பங்களை பரப்புவதற்கு ஒரு சிறந்த அணுகுமுறை***

*ஷ்வேதா பரஜபதி மற்றும் கசாலா ஷேக்*

**7 விவசாயிகளாக அங்கிகாரம் பெறுதல்**

***கேரளாவில் ஒன்றுகூடிய பெண்களின் வெற்றிக்கதை***

*பி.எஸ். கீதாகுட்டி*

**11 வாழ்விற்கு மதிப்பு கூட்டுதல்**

*பி. அனிதாகுமாரி மற்றும் வி. கிருஷ்ணகுமார்*

**14 வேளாண் உயிர்ச்சூழல்வியல் - வளத்திற்கு வழி**

**15 உணவு இறையாண்மை: தமிழ்நாட்டின் நீர்பாசன வசதியுள்ள நெல் சாகுபடி முறைகளுக்கு செம்மை நெல் சாகுபடி அடித்தளமிடுகிறது.**

*வி.கே. ரவிச்சந்திரன், கே. ஆர். ஜெகன் மோகன் மற்றும் பி.ஜே. பாண்டியன்*

**18 சமூக முயற்சியின் மூலம் உணவு உத்திரவாதமின்மையின் சவாலை சந்தித்தில்**

*டி.கே. ஓமனா*

## அன்பிற்குரிய வாசகர்களே,

நல்ல உற்பத்தி, வருமானங்கள் மற்றும் குடும்பத்திற்கான சத்துக்கள் அளிப்பதற்கு காரணமாக இருக்கும் நிலைத்த வேளாண்மையை பின்பற்றும் பெண்களின் முயற்சியை எடுத்துகாட்டும் இந்த இதழை அளிக்க நாங்கள் பெருமைபடுகிறோம்.

நிலைத்த பண்ணை உற்பத்தியில் முக்கிய சாராம்சம் என்னவென்றால் இயற்கை முறையின் மூலம் மண் வளத்தை உயர்த்துவதேயாகும். நல்ல உற்பத்தி, விரிவடைந்த வருமானங்கள் மற்றும் குடும்பத்திற்கு தேவையான சத்துக்கள் அனைத்தும் நீண்ட காலம் செயல்படும் பெண்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஈடுபடும் முயற்சிகளே இவற்றை உறுதிபடுத்துகிறது. கேரளாவில் உள்ள ஏழை பெண்களை சக்திமிக்கவர்களாக உருவாக்கி, திறன் மற்றும் தன்நம்பிக்கையை வளர்த்து மேலும் தேவையான சமயத்தில் உதவியளித்ததனால், ஏழ்மையிலிருந்து வெளி கொணர முடிந்தது. பல்வேறு பண்ணை சார்ந்த தொழில்நுட்பங்களை மறுசுழற்சி செய்வதன் மூலம் ஒருங்கிணைத்ததே இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அதே மாதிரி, கேரளாவில் உள்ள குடும்பஸ்ரீ திட்டம் மூலம் நிலமற்ற பெண்களின் கூட்டுசக்தியை ஒருங்கிணைத்து, நிதியுதவியோடு அவர்களால் சாகுபடி செய்து தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக்காட்டினர். எதவா பெண்கள் சங்கத்தின் உறுப்பினர்களும் கூட உற்பத்தி வேளாண் செயல்பாடுகளில் ஈடுபடும் நிலையில், தங்கள் கூலிக்கு ஏற்ற கனிகளை அறுவடை செய்கின்றனர். மண் வளத்தை விரிவடைவதை குறித்த சமூக வானொலி முயற்சியினால் பன்டல்கந்த் பகுதியில் உள்ள ரஜாவர் கிராமத்தில் முழுமையான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வாசகர்கள்,தங்களின் கலந்துரையாடல்கள் தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தங்களின் விவசாய நண்பர்கள் எவரேனும் இந்த இதழினை படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், அவர்களின் முழு முகவரியினை எங்களுக்கு அனுப்புமாறு பணிவோடு கேட்டுகொள்கிறோம். அவர்களுக்கு இந்த புத்தகத்தை அனுப்புவதற்கு நாங்கள் பெறும் மகிழ்ச்சியடைகிறோம்.

**ஆசிரியர்**

## வாழ்விற்கு மதிப்பு கூட்டுதல் 11

**பி. அனிதாகுமாரி மற்றும் வி. கிருஷ்ணகுமார்**

***வீட்டுத் தோட்ட விவசாய அமைப்பு, கேரளாவில் உள்ள குடும்ப சாகுபடியை புதிதாகவும், இருக்கும் நிலைக்கு தகுந்தாற்போல் செயல்படுத்துவதற்கும் மிக சிறப்பான வாய்ப்புகளை அளிக்கிறது. சாகுபடி முறையை உதாசினப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது முக்கியத்துவம் வாய்ந்த மையங்களின் உதவியோடு, பண்ணை அளவிலான மதிப்பு கூட்டுதல் முன்னேற்ற பாதைக்கு செல்கிறது. எதவா பெண்களின் சங்கம் அவர்களின் கூலிக்கு ஏற்ற கனிகளை அறுவடை செய்யும் அதேநேரத்தில் உற்பத்தி திறன் கொண்ட பண்ணை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.***




## சமூக முயற்சியின் மூலம் உணவு உத்திரவாதமின்மையின் சவாலை சந்தித்தில் 18

**டி.கே. ஓமனா**

***திறன் மற்றும் நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் பெண்களை சக்திவாய்ந்தவர்களாக ஆக்குதல், இருக்கும் திறன்களை பயன்படுத்துவது, தேவையான இடத்தில் உதவி அளிப்பது மற்றும் மறுசுழற்சி மூலம் அனைத்து பண்ணை செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகிய காரணிகள் யாவும், கேரளாவில் உள்ள இந்த ஏழை பெண்களை வறுமையிலிருந்து வெளிகொணர்ந்தது.***



# கிராமத்தின் நேரடி நிகழ்ச்சி

## நல்ல தொழில்நுட்பங்களை பரப்புவதற்கு ஒரு சிறந்த அணுகுமுறை

**ஷ்வேதா பரஜபதி மற்றும் கசாலா ஷேக்**

***வேளாண்மையில் நல்ல தொழில்நுட்பங்களை அதிகளவில் பரப்பசெய்வது எப்பொழுதும் சவாலான ஒன்றுதான்.எனினும், இந்தியாவில் பண்டல்கந்த் பகுதியில் உள்ள சிறிய கிராமமான, ரஜாவரில் உள்ள மக்கள் சமூக வானொலியை பயன்படுத்தி சிறப்பான முறையில், வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுவதை நோக்கி கூட்டு செயல்முறையை பார்வைக்கு கொண்டுவந்தனர். தனி நபரிலிருந்து முழு சமூகத்திற்கும் மண் வளத்தை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பத்தை பரப்பும் ஊடகமாக இந்த சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் கிராமத்தின் நேரடி நிகழ்ச்சி, புதுமையான நிகழ்ச்சியாக அமைந்தது.***



*விவசாய பயிற்சி மையத்தில், பிரகாஷ் குஷாவல் அம்ரித் மித்தி தயாரிக்கப்படும் முறை குறித்த செய்முறை விளக்க பயிற்சி அளிக்கிறார்.*

மத்திய பிரதேசத்தில் உள்ள 6 மாவட்டங்களும், உத்திர பிரதேசத்தில் உள்ள 7 மாவட்டங்களும் அடங்கிய, மத்திய இந்திய பகுதியில் உள்ள பண்டல்கந்த், மித வறண்டப்பகுதியாகும். இந்தப் பகுதி, குறைந்த மழையளவு பெற்று பல வருடங்களாக தொடர்ந்து வறட்சியாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் பண்டல்கந்த் பகுதி, கட்டியான பாறைகளைக் கொண்டுள்ளதால், பெய்யும் குறைந்த அளவு மழையளவும் நிலத்தின் மேல்பரப்பில் வீணாக வழிந்தோடுகிறது. ஆகையால், இந்தப் பகுதியில் எப்பொழுதும் தண்ணீர் பற்றாக்குறையும், மிகவும் குறைந்த வேளாண் செயல்பாடுகளும் இருந்துவருகிறது. கடந்த சில காலமாக மாறிவரும் சீதோஷண நிலையும், மிக மோசமான மற்றும் எதிர்பார்த்திராத மழையும் விவசாயிகளின் நிலையை மேலும் மோசமாக்கியது.

பண்டல்கந்த் பகுதியில் தொடர்ந்து வறட்சி நிலவுவதால் வேளாண் உற்பத்தி பாதிப்படைந்து அதன் தொடர்ச்சியாக வாழ்வாதார அமைப்பு முறைகள் வலுவிழக்கச் செய்துள்ளது. பருவ நிலை மாற்றத்தினால், வேளாண் வாழ்வாதாரம் மற்றும் உணவு தானியங்களின் உற்பத்தி 58மூ பண்டல்கந்த் பகுதியில் குறைந்துள்ளது. ஒருகாலத்தில் அடர்ந்த காடாக இருந்த பண்டல்கந்த் பகுதி, தற்போது அந்த பசுங்காடுகள் இன்றி அழிந்துவருகிறது. இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வாக, உகந்த அணுகுமுறைகளின் அடிப்படையில், பருவ நிலை மாற்றத்தினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை குறைப்பதற்கு பண்டல்கந்த் பகுதியில் நிலைத்த வளர்ச்சிக்கு அர்பணிக்கும் சமுதாய அமைப்பான, வளர்ச்சி மாற்றங்கள் என்று கூறப்படும் அமைப்பு புதுமையான அணுகுமுறையான, கிராம நேரடி நிகழ்ச்சி ஒன்றை கிராம சமூகங்களுக்காக வடிவமைத்தது. கிராம நேரடி நிகழ்ச்சி சமூக வானொலியை கருவியாக வைத்து உள்ளூர் சமூகங்களை பயன்படுத்தப்பட்டது மற்றும் சுலபமாக பின்பற்றக்கூடிய தொழில்நுட்பங்கள் பொழுதுபோக்கு - கல்வி முறையில் அவர்களிடம் கலந்துரையாடின.

### ஒரு நேரடி நிகழ்ச்சி

கோன் பனேகா ஷுப்கல் லீடர் எனப்படும் முதல் இந்திய கிராம நேரடி நிகழ்ச்சி, அர்ச்சாவை அடிப்படையாக கொண்ட வானொலி பண்டல்கந்த் என்ற சமூக வானொளியில் ஒளிபரப்பப்பட்டது. பண்டல்கந்த் வானொலி வேளாண் துறை மற்றும் சமூகம் இணைந்து மேம்படுத்தப்படுகிறது, ஏனென்றால் மக்களின் பங்கேற்புடன் வேளாண் துறை பல நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சி, மத்திய இந்தியாவில் உள்ள வறண்ட பகுதிகளில், பருவ நிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு உருவாக்குவதற்கும், தேர்வுகளை பயன்படுத்துவதற்கும் உதவுகிறது.

வல்லுனர்கள் மற்றும் சமூக நேர்காணல்கள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், தொழில்நுட்ப அடிப்படையிலான அறிக்கைகள், நாட்டுப்புற பாடல்கள், வானொலி நாடகங்கள் மற்றும் போட்டிகள் ஆகிய அனைத்தும் ஒன்றிணைத்து இந்த நிகழ்ச்சியை ஆர்வமுடையதாகவும், பொருளுடையதாகவும் ஆக்குகிறது. இந்த போட்டிகள், பங்கேற்பாளர்களுக்கு, பருவ நிலை மாற்றத்திற்கு உகந்த தொழில்நுட்ப தேர்வுகள் குறித்த திறன் வளர்ப்பு, சிறந்த செயல்பாட்டாளரை தேர்வு செய்ய வெளியேற்றும் சுற்றுக்கள், நிலைத்தத்தன்மையை உறுதிப்படுத்த தேர்வு செய்தவர்களை தக்கவைத்துகொள்ளுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த கிராம நேரடி நிகழ்ச்சியில், உள்ளூர் கிராமங்களிலிருந்து தோந்தெடுக்கப்பட்ட பருவ நிலை வெற்றியாளர்களை தேர்ந்தெடுத்து, பல்வேறு செயல்படுத்தக்கூடிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியை அவர்கள் அளிக்கின்றனர். இந்த வெற்றியாளர்களை ஆய்வு செய்து, இவர்களால் எத்தனை விவசாயிகளை ஈடுபடுத்த முடியும் என்ற அடிப்படையில் தேர்வுச் சுற்றுக்களின் மூலம் எடுத்துச்சென்று, மேலும் கிராமத்தில் குறிப்பிட்ட செயல்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் குறித்து இவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இந்த முறையின் மூலம், தகவலை பெரிய சமூகத்திற்கு மிக விறைவாகவும், சிறப்பாகவும் விரிவாக்கம் செய்வதற்கு உதவியது. கிராம நேரடி நிகழ்ச்சியின்போது கிராமங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பருவ நிலை மாற்றத்திற்கு ஏற்ற 25 தொழில்நுட்பங்களில், அம்ருத் மித்தியை பயன்படுத்துவது, மண் வளத்தை அதிகரிக்கப்பதற்காக செயல்படுத்தும் முறைகளில் ஒன்றாகும். மேலும் இரசாயன உரத்தின் பயன்பாடு குறைகிறது. அம்ருத் மித்தி, பயிர் கழிவுகள், கால்நடை கழிவுகளுடன் சிறிது வெல்லம் கரைக்கப்பட்ட தண்ணீரைக் கொண்டு தயாரிக்கப்படும், இயற்கை எருவாகும். இந்த எரு மிக அதிகச் சத்துக்கள் நிறைந்ததாகும். மேலும் மண் வளம் மற்றும் தண்ணீர் தக்கவைக்கும் திறன் அதிகரிக்கச்செய்யும் என்பது நன்கு அறிந்ததே. ஆகையால், பன்டல்கந்த் போல் மித வறண்ட பகுதியில் வேளாண்மைக்கு உகந்த சிறப்பான தொழில்நுட்பங்களில் இது ஒன்றாகும்.

பிரகாஷ் குஷ்வாஹா, திகம்கர் மாவட்டம் ரஜாவர் கிராமத்தை சேர்ந்த 25 வயதுடைய விவசாயி கிராம நேரடி நிகழ்ச்சியின்போது, அம்ருத் மித்தியை தயாரிக்கவும், பயன்படுத்தவும் கற்றுகொண்டார். இதுவரையில்லாத வகையில் அவர் பண்ணையில் அம்ருத் மித்தியை பயன்படுத்துவதோடு மட்டுமில்லாமல் கிராமத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் இந்த தகவலை பரப்பினார். சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்து நன்கு புரிந்துகொண்ட பிரகாஷ், சுற்றுச்சூழலும்,



*ரஜாவர் கிராமத்தில்,இரண்டு ஆண்டுகள் அம்ரித் மித்தி பயன்படுத்திய பச்சைபசேலென காணப்படும் வயல்கள்.*

விவசாயிகளும் பயனடையும் வகையில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் முறைகளை பரிசோதனைகளையும் செய்தார். பிரகாஷின் கதை பருவ நிலை மாற்றத்தின் செயல்பாடுகளினால் ஏற்பட்ட தாக்கத்தில் உருவான வெற்றிக் கதைகளில் ஒன்றாகும். மேலும் கிராம நேரடி நிகழ்ச்சியின் இறுதி பட்டம் வென்றவர்களில் ஒருவராக இவர் இருந்தார்.

## தாக்கத்தை பரப்புதல்

கிராம நேரடி நிகழ்ச்சியில் பங்குகேற்ற பின்னர், பிரகாஷ், அவருடைய கிராமத்தில் பிரபலமடைந்தார். மேலும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்த அவரின் ஆழ்ந்த அறிவை கண்டு மக்கள் அவருக்கு மரியாதை அளித்தனர். தற்போது பண்ணை சார்ந்த சந்தேகங்களை, அனைத்து வயதுடைய மக்களும், இவரிடம் அறிவுரை பெறுகின்றனர்.

பிரகாஷ்ஜி, என்னையும், என் சகோதரிகளையும் எங்கள் வீட்டில் மரங்கள் நடுவதற்கு ஊக்கப்படுத்தியவர்களில் ஒருவர் என்று அதே கிராமத்தை சேர்ந்த பப்ளி என்ற 20 வயது பெண் கூறினார். இன்னும் கூடுதலாக பப்ளியின் தந்தை, பிரகாஷ் ரஜாவரில் உள்ள ஒவ்வொரு விவசாயிக்கும், ஒரு உதாரணமாக, தகவல் ஆதாரமாக, ஆலோசகராக மற்றும் ஆய்வாளராக திகழ்கிறார். இவர் இந்த கிராமத்தின் ஒவ்வொரு விவசாயியின் மாற்றத்திற்கும் காரணமாக இருந்தார்.

பிரகாஷின் கிராமமான, ரஜாவர் நுழையும்போது, மலையடிவாரத்தில் உள்ள பச்சைபசேலென இருக்கும் வயல்களில் மக்கள் ஆர்வத்துடன் பணிசெய்து கொண்டிருப்பதை காணலாம்.

குழந்தை பருவத்திலிருந்தே விவசாயம் செய்துவரும் கிராமவாசியான, சந்தோஷ் குஷ்வாஹா என்பவர் "எங்கள் நிலம் முன்பு வளமாக இல்லை, மேலும் பாறை நிலம், குறைந்த மழையளவு கொண்டிருப்பதால்

**மண்புழு உரம் தயாரித்து தோட்டத்தில் இடப்படுகிறது. மீண்டும், காய்கறி உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வீணான தழைகளை மறுசுழற்சி செய்து மண்புழு உரம் தயார் செய்யப்படுகிறது.**

எந்த பயிர் வளர்ப்பதும் மிக கடினமாக இருக்கும். அதனால் விவசாயம் இங்கு சுலபமான பணியாக இல்லை என்று கூறினார். தற்போது, சந்தோஷ் தனது வயல்களை காட்டும்போது அவரது முகம் சந்தோஷத்தில் ஒளிர்கிறது. மேலும், அம்ருத் மித்தியை வயலில் பயன்படுத்திய பின்னர் நிலத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளது என்று கூறினார். சந்தோஷ் மற்றும் மற்ற விவசாயிகளும் அவர்களுடைய நிலத்தின் சிறு பகுதியை அம்ருத் மித்தியை பயன்படுத்தி முதலில் ஒரு பயிர் பட்டத்திற்கு பரிசோதனை செய்தனர். அம்ருத் மித்தியை பயன்படுத்திய இடத்தில் தண்ணீர் தேவை மிக குறைவாக உள்ளது, மேலும் தானியங்கள் ஆரோக்கியமாகவும் இருப்பதை அவர்கள் கண்டனர். இன்று ரஜாவரில் உள்ள சுமார் 90 சதவிகித விவசாயிகள் அம்ருத் மித்தியை தனது வயல்களில் பயன்படுத்துகின்றனர். அம்ருத் மித்தியை பயன்படுத்துவதினால், பாசனத்திற்கு தேவையான தண்ணீரின் அளவு குறைவதோடு, பயிரின் உற்பத்தி தரம் விரிவுபடுத்துகிறது என்று விவசாயிகள் கூறுகின்றனர். இது மேலும் இரசாயன உரங்களின் செலவு குறைப்பதற்கும் உதவுகிறது. இந்த செலவே முன்பு விவசாயிகளுக்கு அதிக பண்ணை செலவாக இருந்தது. இதுமட்டுமில்லாமல், தற்போது, இந்த கிராமத்தில் முன்பு வளர்க்க இயலாத, தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களான காய்கறிகள் வயல்களில் வளர்க்க முடிகிறது.

ரஜாவரில் உள்ள மக்கள் மரங்கள் வளர்ப்பதற்கும், அவர்களுடைய சொத்திற்கும் உள்ள சம்மந்தத்தினை புரிந்துகொண்டனர். நல்ல மழை பெய்வதற்கு தேவையான மரங்களை நடுவது முதற் கொண்டு, பயிர் சுழற்சி தொழில்நுட்பம் வரையில் பயன்படுத்தக்கூடிய அம்ருத் மத்தி, மற்றும் இதர முறைகளும் மக்களால் பயன்படுத்தப்பட்டு இயற்கை தாயுடனான உறவு அர்த்தமுள்ளதாக ஆக்கப்பட்டது. இந்த சிறிய கிராமத்தின் வெற்றி, பெருமைப்படும் விவசாயிகளின் முகத்தில் பிரதிபலிக்கிறது.

ஆகையால், ரஜாவர் கிராமம் ஒன்று சேர்ந்த மாற்றத்தின் செயல்முறை மூலம் சிறந்த முறையில் வளர்ச்சியை நோக்கி செல்வதை செய்து காட்டியுள்ளது. சமூக வானொலி, இங்கு, தகவல்களை தனி மனிதர்களுக்கு வழங்குவதில் வெற்றி கண்டதுமட்டுமில்லாமல், பருவ நிலை மாற்றத்தின் பிரச்சினைகளுக்கும் இந்த சமூகத்தில் கலந்துரையாடும் அளவிற்கு முன்னேறியுள்ளது. இந்த செயல்பாட்டின் மாற்றம் ஒருவரிடமிருந்து துளிர்ந்து, மற்ற சமூக மக்களுக்கு சென்றடைந்து, சமூக அளவிலான தாக்கத்தை பெற்றது என்ற வகையில் இந்த கிராமம் ஒரு ஆர்வமுடைய மாதிரியின் பிரதிநியாக திகழ்கிறது. மேலும் கிராம நேரடி நிகழ்ச்சி, இந்த செயல்முறையை துவக்குவதற்கு முக்கிய பங்கு வகித்தது.

■

**Shweta Prajapati**
Deputy Manager, Development Alternatives

**GazalaShaikh**
Assistant Programme Director
Development Alternatives
B-32, TARA Crescent
Qutub Institutional Area, New Delhi - 110 016

மூலம்: லீசா இந்தியா, மார்ச் 2015, வால்யூம் 17, இதழ் 1

**LEISA INDIA Language Editions**



Kannada, Telugu, Tamil, Oriya, Hindi, Marathi and Punjabi



*நெல் வயல்களில் பெண்கள் பணிபுரிகின்றனர்*

# விவசாயிகளாக அங்கிகாரம் பெறுதல்

## கேரளாவில் ஒன்றுகூடிய பெண்களின் வெற்றிக்கதை

**பி.எஸ். கீதாகுட்டி**

***விவசாயத்தில் பெண்களின் வெற்றியை வித்தியாசமாக படம்பிடித்து காட்டியிருக்கிறது கேரள மாநிலம். பெண்கள் குழுக்களின் ஒன்றுகூடிய சக்தி, உள்ளூர் சுய அரசுகளின் ஒருங்கிணைப்பு, மற்றும் திட்டம் செயல்படுத்துவதற்கு முன் அளிக்கும் நிதியுதவி நிலமற்ற பெண்களுக்கு அவர்கள் வர்த்தக இயற்கை விவசாயிகளாக கேரளாவில் உருவெடுத்துள்ளனர். பெண்கள் தற்போது பெரு விவசாயிகளாக, குழு அடிப்படையில் அதிக பகுதிகளில் நெல், காய்கறிகள், வாழைப்பழம் மற்றும் கிழங்கு வகைகள் ஆகியவற்றை சாகுபடி செய்வதை மாநிலத்தில் காண முடிகிறது. இந்த பெண்கள் குழுக்கள் மூலம் பெண்கள் அதிக எண்ணிக்கையில் விவசாயிகளாக அங்கீகாரம் பெற்று வருகின்றனர்.***

கடந்த முப்பது ஆண்டுகளில், சமூக பொருளாதார மாற்றங்களினால், கேரளாவில் அதிகளவு சாகுபடி செய்யப்பட்ட நெல் வயல்கள் அனைத்தும் சாகுபடி அல்லாத மற்ற செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. அதிகரித்துவரும் கூலி செலவுகள், சிறந்த சந்தை உதவி இல்லாமை, குறைந்த வருமானம் மற்றும் தொடர்ந்து மாறிவரும் பருவ நிலை போன்ற காரணிகள் யாவும், சொந்த நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் மத்தியில் தொடர்ந்து சாகுபடி செய்வதற்கு ஆர்வமற்ற நிலை உருவாகியுள்ளது.

பரவலாக நெல் வயல்கள் தரிசாக விடப்பட்டது. இது, விவசாயத்தில் உள்ள வேலை வாய்ப்பு குறைந்ததால், பெண் கூலியாட்கள் மற்றும் அவர்களது குடும்பங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பாரம்பரியமாக, கேரளா வேளாண் அமைப்பின் முக்கிய பங்குதாரர்கள், பெண்களே. இதில்

குடும்பஸ்ரீயின் கீழ் பெண்கள் கூட்டு சக்தியை பெற்றுள்ளனர். மேலும் விவசாயம் செய்வதற்கு குறைந்த வட்டியில் கடனுதவியும் கிடைத்தது. இவை நிலமற்ற பெண்கள், விவசாயிகளாக மாற்றியதற்கு முக்கிய பங்கு வகித்தன.

பெரும்பாலானோர் சொந்த வயல்களில் பணியாற்றும் கூலி பெறாத கூலியாட்களாகவோ அல்லது மற்ற வயல்களில் பணியாற்றும் கூலியாட்களாகவோ இருக்கின்றனர். பொதுவாக மாநிலத்தில் பரவலாக, பெண்கள் குழுக்கள் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக இருப்பது, விவசாயம் செய்வதற்கான நிலம் இல்லாமை. நில உரிமையாளர்கள் தன் சொந்த நிலத்தை குத்தகைக்கு விடுவதில் தங்களது நில உரிமையை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் அவர்களிடம் இருந்தது.

கேரளாவில் உள்ள நில உரிமையாளர் சட்டத்தின் ஒரு பகுதியாக, சாகுபடி செய்வதற்கு நிலத்தை குத்தகைக்கு விடுவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பல்வேறு வகையான முறையற்ற வழியில் குத்தகைக்கு விடுவது புழக்கத்தில் இருந்தது. இம்மாதிரியான முறையற்ற குத்தகை ஏற்பாடுகளில் கூட, பெரும்பாலான நில உரிமையாளர்கள், தங்களது நிலத்தில் பெண்கள் குழு விவசாயம் செய்வதற்கு அனுமதிக்க தயாராக இல்லை. இதுவே, விவசாயத்தில் பெண்களின் பங்கேற்பை நிலைத்தத்தன்மை பெறுவதில் பாதிப்பு ஏற்பட்டதில் இதுவே பிரச்சனை.

பெண்களை ஒதுக்கப்பட்ட வேளாண் வாழ்வாதாரங்கள், ஒரு முக்கிய வாய்ப்பாக கேரள அரசு கருதுகிறது. பெண்கள், குழுவாக சிறு நிதி உதவியை பயன்படுத்தி, உள்ளூர்களில் உள்ள தரிசு நிலத்தை குத்தகைக்கு எடுத்து, அரசின் குடும்பஸ்ரீ திட்டத்தின் மூலம் விவசாயம் செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டது.

## குடும்பஸ்ரீ திட்டம்

குடும்பஸ்ரீ என்பது மாநில ஏழ்மை ஒழிப்பு அமைப்பு, 1998-ல் கேரளாவில் துவக்கப்பட்டது. இந்த திட்டம், சமூக-பொருளாதார வளர்ச்சி மற்றும் பெண்களை சக்திமிக்கவர்களாக்குவதன் மூலம் ஏழ்மையை ஒழிப்பதற்கு உள்ளூர் சுய அரசுகளுடன் பெண்களின் சமூக அளவிலான குழுக்கள் சேர்ந்து பணிபுரிவதற்காக மாநிலத்தில் பரவலாக உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு உள்ளூர் சுய அரசு அமைப்பான - கிராம பஞ்சாயத்து அல்லது நகர உள்ளூர் அமைப்பில், குடும்பஸ்ரீ மூன்று மட்டத்தில் கூட்டமைப்பை அமைத்துள்ளது. அதாவது, அக்கம்பக்கம் உள்ள நண்பர்கள் குழு, பகுதி வளர்ச்சி மையம் மற்றும் உள்ளூர் சமூக வளர்ச்சி மையம்.

ஒரு பகுதியில் வாழும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பத்து முதல் இருபது குடும்பங்கள் ஒன்று சேர்ந்து அடிமட்ட நண்பர்கள் குழுவாக பதிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு தொகுதியில், ஒரு பகுதி வளர்ச்சி மையம் உள்ள உள்ளூர் சமூக குழுவில், ஒவ்வொரு பகுதி வளர்ச்சி மைய பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு நண்பர்கள் குழுவிலிருந்து ஐந்து உறுப்பினர்களை கொண்டது ஒரு பொதுக் குழு. குடும்பஸ்ரீயின் உயர் மட்ட அமைப்பு, அதாவது சமூக வளர்ச்சி மையம், உள்ளூர் சுய அரசு அமைப்பின் அடுத்த மட்ட இடத்தில் உள்ளது.

குடும்பஸ்ரீ திட்டத்தின் கிராம பஞ்சாயத்து அளவிலான ஒருங்கிணைந்த அமைப்பான உள்ளூர் சமூக வளர்ச்சி மையம், ஒட்டுமொத்த அமைப்பை செயல்படுத்துவதற்கு சிறந்த பங்கு வகிக்கிறது. இந்த அமைப்பு கிராம பஞ்சாயத்து அளவில் குடும்பஸ்ரீ திட்டத்தின் கீழ் பெண் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து கூட்டு பொறுப்பு குழுவை உருவாக்குவது, பெண்கள் குழுக்களுக்கு கடன் பெறும் படிவத்திற்கு தேவையான ஆவணங்கள் தயாரித்தல், 250 முதல் 300 வரை உள்ள கூட்டு பொறுப்புக்குழுக்களை நன்கு பார்வையிடுதல், அவர்களுடைய செயல்பாடுகளுக்கு உதவிபுரிதல், கிராம பஞ்சாயத்து மற்றும் வேளாண்மைத் துறையுடன் நட்புறவை மேம்படுத்தி வளர்ச்சி திட்டங்களை கொண்டு வருவது, பயிர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் வழிநடத்துதல் மேலும் கடனை குழுக்களால் காலம் தவறாமல் திரும்ப செலுத்தப்படுகிறதா என்பதை கண்காணித்தல் ஆகியவை குழுக்களால் செய்யப்படுகிறது.

சமூக வளர்ச்சி மையம் மற்றும் உள்ளூர் சுய அரசின் முக்கிய சாராம்சம் என்னவென்றால், பங்கேற்போடுகூடிய அரசியலமைப்பு சமூகத் தேவைகளின் வளர்ச்சியை அடிமட்டத்திலிருந்து உயர்வதற்கு ஒருங்கிணைப்பது மற்றும் இது உள்ளூர் சுய அரசின் கருவியாக பயன்படுத்தி பல்வேறு ஆதாரங்களிலிருந்து உள்ளூர் வளர்ச்சி மற்றும் ஏழ்மையை ஒழிப்பதற்காக ஆதாரங்கள் அனைத்தும் ஒருங்கிணைப்பதே ஆகும். நபார்ட் வங்கியின் கீழ் இயங்கும் கூட்டு பொறுப்புக் குழு திட்டத்தில் வட்டியில்லாமல் குழு விவசாயத்திற்கு நிதியுதவி பெறப்பட்டது. கு.பொ.கு திட்டத்தின் கீழ் குழுவை அடிப்படையாகக் கொண்டு நிதியுதவி பெற்று விவசாய செயல்பாடுகளை நான்கு முதல்

ஐந்து பெண்கள் கொண்ட குழு செய்தது. தேசிய கிராம வாழ்வாதார அமைப்பின் கீழ் உள்ள, மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனாவிடமிருந்து குறைந்த வட்டிவிகிதத்தில் குடும்பஸ்ரீ உதவியுடன் நிதியுதவிக்கு மானியம் பெற்றதற்கு மிக முக்கிய பங்கு வகித்து, பெண்களின் கனவை நனவாக்கியது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த 2.8 லட்சத்திற்கும் மேலான பெண் உறுப்பினர்கள் 61836 கூ.பொ.கு- லாக ஒருங்கிணைந்து, தற்போது தரிசு நிலத்தில் விவசாயம் செய்துவருகின்றனர். நடப்பு ஆண்டில், கூ.பொ.கு விவசாயம் மூலம் மாநிலத்தில் 38706 ஹெக்டேர் நிலப்பகுதிகளுக்கு கொண்டுவரப்பட்டது. இது மேலும் பெண்கள் விவசாயத்தை மீண்டும் 39000 ஹெக்டேர் பரப்பளவில் பெரும்பாலும் இயற்கை விவசாயத்தையே மேற்கொள்ளப்பட்டது என்றும் புரிந்துகொள்ளலாம். நெல், (10934 ஹெக்டேர்), வாழை (10648 ஹெக்டேர்), கிழங்குகள் (8686 ஹெக்டேர்), காய்கறிகள் (8476 ஹெக்டேர்), மற்றும் இதர பயிர்கள் (14433 ஹெக்டேர்) ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது

## இயற்கை சார்ந்த குழு விவசாயம்

பெரும்பாலான பெண் குழு உறுப்பினர்கள் குறைந்த இரசாயன இடுபொருட்களுடன், இயற்கை சார்ந்த விவசாயத்தை பின்பற்றுகின்றனர். இவர்களுள் அதிக எண்ணிக்கையில் பெண்கள் இயற்கை விவசாயத்தை முழுமையாக பின்பற்ற முடிகிறது. இயற்கை எருவிற்கு இவர்களுள் சிலர் பசுஞ்சாணம், கோழி எரு, மண்புழு உரம், காட்டு செடி எரு, தென்னை நார் உரம் போன்றவைகளை உபயோகப்படுத்தி தனக்கு தேவையான சொந்த உரத்தை தயார் செய்துகொள்கின்றனர். பூச்சி மேலாண்மைக்கு, பெண் குழுக்கள் அதிகமாக தயாரிக்கப்படும் உயிர் இடுபொருட்களையே சார்ந்து இருக்கின்றனர். செலவு மற்றும் கூலி ஆகிய இரண்டும் அதிகம் தேவைப்படும் இயற்கை சார்ந்த விவசாயத்தில், தங்களது விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று வருந்துகின்றனர். ஆனால் சில பெண்கள், உள்ளூர் சமூகங்களிலேயே குறைந்த விலையில் கிடைக்கும் பாதுகாப்பான உணவு அளிப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததற்கு திருப்தியடைந்ததை வெளிப்படுத்தினர்.

சில பெண் குழுக்கள், அவர்களது விளைபொருட்களை பதப்படுத்தி, அதனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக விற்பதற்கு ஆர்வமூட்டப்பட்டது. அலம்கோட் மற்றும் தென்னல்ல பஞ்சாயத்துகள் தங்களுடைய புதுமையான தலைமை பண்புகளை செய்துகாட்டியுள்ளன. அவை பெண் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை சேகரிப்பது, உள்ளூர் அரிசி ஆலைகளில் அரைத்தல் மேலும் தென்னல்ல



*சந்தைக்கு அரிசி மூட்டையை தயாரிக்கும் உறுப்பினர்கள்*

அரிசி மற்றும் ஆலம்கோட் புத்தாரி இயற்கை அரிசி என்று சொந்த பெயரில் விற்கப்படுகிறது. பல்வேறு அரிசி விளைபொருட்களான அவல், அரிசி மாவு, உடைந்த அரிசி போன்றவைகளும், இந்த இரண்டு பெண் விவசாய குழுக்கள் சந்தைக்கு அறிமுகம் செய்தது. நபார்ட் வங்கியின் உதவியுடன் எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் பெண் விவசாயிகள் உற்பத்தி நிறுவனங்கள் உருவாவதற்கு உதவியது.

## தாக்கம்

"தற்போது நாங்கள் விவசாயிகள், பணியாளர்கள் அல்ல" என்னால் என் குழந்தைகளுக்கு உயர்ந்த கல்வியை வழங்க முடிகிறது", "என் மகள்களின் திருமணத்திற்கு என்னால் தங்கம் வாங்க முடியும்", "நான் இருசக்கர வாகனத்தை சொந்தமாக வைத்திருக்கிறேன்", "என்னால் என் பெயரில் நிலம் வாங்கி புதிய வீடு கட்ட முடியும்", "என்னால் எனது கணவருக்கு இரு சக்கர வாகனம் வாங்க முடியும், மேலும் அவருடைய தொழிலை விரிவுபடுத்துவதற்கு உதவவும் முடியும்", நான் உற்பத்தி செய்த நெல்லை என்னால் சேமித்து வைக்க முடியும், "இது வருடம் முழுவதும் என் குடும்பத்திற்கு தேவையான அரிசியை பெற முடிந்தது. பணம் ஈட்டும் உறுப்பினராக கருதி எனக்கு மரியாதை செலுத்துகின்றனர். மேலும் என் குடும்பத்தில் அனைத்து முடிவெடுக்கும் விஷயங்களுக்கும் என் ஆலோசனையை கேட்கின்றனர்", "என் கணவர் நிதியுதவிக்காகவும், நண்பர்கள் வளர்ச்சி தகவல்களை பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து பெறுவதற்கு அணுகுகின்றனர்". இவை யாவும் பெண்களின் சில குரல்கள் திட்டத்தின் தாக்கமாக அவர்கள் வாழ்வில் பிரதிபலிக்கிறது.

அன்னமனடா (திருசூர்), ஆலத்தூர் (பாலக்காடு) , ஆலம்கோட் மற்றும் தென்னல்ல (மல்லபுரம்) ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில்,

பஞ்சாயத்து அளவிலான குடும்பஸ்ரீ அமைப்புகளை உள்ளூர் பஞ்சாயத்து மற்றும் வேளாண் அலுவலகம் உதவியோடு ஏற்படுத்தி, அதன்மூலம் சாகுபடி செய்யமுடியாத நில உரிமையாளர்களிடமிருந்து பெற்று "நில வங்கி" என்ற முதற்கட்ட அமைப்பின் மூலம், பெண்கள் குழுக்களுக்கு தேவையான குத்தகைக்கு விடும் நிலங்கள் அவர்களுக்கு உறுதியாக கிடைக்கும்படி செய்கின்றனர். நில உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் நிலத்தை சாகுபடி செய்வதற்கான தேவை , குத்தகை விவசாயத்தை எடுப்பதற்கு பெண்கள் குழுக்களின் தயார் நிலை, மேலும் வேளாண் அலுவலகம் மூலம் நிலத்தை குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது மூன்று வருடங்கள், குத்தகைக்கு எடுக்கும் வழிமுறை ஆகிய காரணிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தியதன் மூலம் நில உரிமையாளர்கள் அவர்களது நிலத்தை பெண் விவசாயிகளுக்கு குத்தகைக்கு அளிப்பது பாதுகாப்பானது என்று உணர்ந்துள்ளனர். மிகவும் ஆர்வமிக்க ஆலம்கோட் மற்றும் தன்னல்ல பஞ்சாயத்துகளை சேர்ந்த பெண் தலைவர்கள் பதஷேகரா குழுமங்களின் ஒருங்கிணைப்பாளர்களாகவும் செயல்படுகின்றனர். (வேளாண்மை துறை ஏற்படுத்திய உள்ளூர் நெல் விவசாயிகளின் குழுமம்).

கடந்த காலத்தில் பெண்களுக்கு கடனுதவி அளிக்க ஆர்வமில்லாத வங்கி முகமைகள், தற்போது பல பெண்கள் குழுக்களுக்கு அதிக கடன் அளிக்கிறது. கூட்டு பொறுப்புக் குழு திட்டம் மூலம் செயல்பாட்டிற்கு முன் அளிக்கப்பட்ட கடனுதவி மற்றும் பெண்கள் குழுக்கள் சிறப்பான முறையில் செய்த மேலாண்மை ஆகியவை கேரளாவில் உள்ள பெண்களை தொழில் விவசாயிகளாக மாற்றிய கற்களாக இருக்கிறது.

## நன்செய் நில உயிர்ச்சூழல் அமைப்பின் பாதுகாவலர்கள்

உறுதியாக இடுபொருட்கள் மற்றும் ஆதாரங்கள் கிடைப்பதனால் ஏழைப் பெண்கள் விவசாயத்தை செய்கின்றனர். மேலும் அவர்களை பணம் ஈட்டுபவர்களாக மாற்றுகிறது, அதன்பின்னர் அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் மத்தியில் மதிப்பிடப்படும் உறுப்பினர்களாக மாறுகின்றனர். குடும்பஸ்ரீயின் கீழ் பெண்கள் கூட்டு சக்தியை பெற்றுள்ளனர். மேலும் விவசாயம் செய்வதற்கு குறைந்த வட்டியில் கடனுதவியும் கிடைத்தது. இவை நிலமற்ற பெண்கள் விவசாயிகளாக மாற்றியதற்கு முக்கிய பங்கு வகித்தன.

நீண்ட காலமாக தரிசாக விடப்பட்ட நெல் வயல்களில் நிலைத்த நெல் சாகுபடி செய்ததனால், கேரளாவில், பெண்கள் குழுக்கள் இயற்கையாகவே "நன்செய் நில உயிர்ச்சூழல் அமைப்பின் பாதுகாவலர்களாக உருவாகியுள்ளன. கேரளாவில் உள்ள பெண் விவசாயிகள் பாதுகாப்பான மற்றும் நல்ல தரமான உணவு உற்பத்தி செய்து, உள்ளூர் மக்களுக்கு அளிக்க முடிகிறது என பெருமிதம் கொள்கிறார்கள். அதே சமயத்தில் கவுரவமான வருமானம் பெற்று, நல்ல தரமான வாழ்க்கை வாழவும் முடிகிறது.

■

**Geethakutty P S**
Professor and Project Co-ordinator
Centre for Gender Studies in Agriculture
Kerala Agricultural University
Vellanikkara, Thrissur, Kerala
E-mail: geethakutty@gmail.com

மூலம்: லீசா இந்தியா, டிசம்பர் 2015, வால்யூம் 17, இதழ் 4

# வாழ்விற்கு மதிப்பு கூட்டுதல்

**பி. அனிதாகுமாரி மற்றும் வி. கிருஷ்ணகுமார்**

***வீட்டுத் தோட்ட விவசாய அமைப்பு, கேரளாவில் உள்ள குடும்ப சாகுபடியை புதிதாகவும், இருக்கும் நிலைக்கு தகுந்தாற்போல் செயல்படுத்துவதற்கும் மிக சிறப்பான வாய்ப்புகளை அளிக்கிறது. சாகுபடி முறையை உதாசினப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது முக்கியத்துவம் வாய்ந்த மையங்களின் உதவியோடு, பண்ணை அளவிலான மதிப்பு கூட்டுதல் முன்னேற்ற பாதைக்கு செல்கிறது. எதவா பெண்களின் சங்கம் அவர்களின் கூலிக்கு ஏற்ற கனிகளை அறுவடை செய்யும் அதேநேரத்தில் உற்பத்தி திறன் கொண்ட பண்ணை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.***




*மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை பார்வைக்கு வைக்கும் உறுப்பினர்கள்*

கேரளாவில் உள்ள முழுமையான வீட்டுத்தோட்டம் என்பது வளமான மண், நல்ல சீதோஷண நிலை, சமமாக பெய்யும் மழை மற்றும் சிறுகுறு நிலப் பரப்பளவு ஆகிய பண்புகளை தாங்கியிருக்கிறது. தென்னை மற்றும் பனை மரங்கள் பலவருடப் பயிராக உருவாகி, துணை பயிர்களை அதனுடன் வளர்க்க இடைவெளி அளிக்கிறது. ஊடுபயிர்களை தேர்ந்தெடுத்தல், விளைபொருட்களை பயன்படுத்துவது சமந்தமான முடிவுகள், குடும்பத் தேவைகளை சந்தித்தல், சிறு தொழில் பதப்படுத்துதல் மற்றும் மிகுதியாக உள்ள விளைபொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிப்பது பெண்களே. பொதுவாக, காய்கறிகள் (வருடம் முழுவதும் சத்துக்கள் அல்லது வீட்டுத் தோட்டம்) கிழங்கு பயிர்கள் (கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, உருளைக் கிழங்குகள் போன்றவை குடும்ப பயன்பாட்டிற்காக ஒரு வருடத்திற்கு சேமிக்கப்படுகிறது) மற்றும் வாழைப்பழம் (பல்வேறு பாகங்களாக இருக்கும் காய்கறிகள் மற்றும் பழங்கள்) ஆகியவை ஊடுபயிர்களாக வளர்க்கப்படுகிறது. மேலும் வீட்டில் பயிர்கள் தேர்வு செய்வதில் பெண்களே முடிவெடுக்கின்றனர். பல வருட பயிர்களான முருங்கை, கறிவேப்பிலை, கீரைகள் ஆகிய பயிர்களையும் தென்னை தோட்டத்தின் இடையில் வளர்க்கலாம்.

பயன்பாடு மற்றும் வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் கலப்பு பயன்பாடு உடைய பயிர்களையே பெரும்பாலும் தேர்ந்தெடுப்பர். பல்வேறு செயல்பாடுகளை செய்வதற்கும், குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பான உணவுத் தேவையை தீர்ப்பதற்கும், அவர்கள் ஒத்துபோகும், சுலபமாக இருக்கும் மற்றும் ஒன்றோடொன்று சார்ந்திருக்கும் காரணிகளை ஒருங்கிணைக்கின்றனர். சுமார் 30மூ குடும்பங்கள் கோழி அல்லது வாத்து, பண்ணையை சிறியளவில் (10-20 பறவைகள்), கால்நடை, ஆடுகள், மேம்படுத்தி வந்தனர். இதில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமான செயல்பாடுகள் பெண்களே செய்கின்றனர்.

## பண்ணை அளவிலான மதிப்புக் கூட்டுதல்

ஐ.சி.ஏ.ஆர்- மத்திய மரப்பயிர்கள் ஆராய்ச்சி மையம், பண்ணை அளவில் மதிப்பு கூட்டுதலை உயர்த்த 2010-2014 வரை பெண்கள் பங்கேற்புடன் கூடிய திட்டத்தை செயல்படுத்தியது. இருக்கும் பண்ணை ஆதாரங்களை வீணாகாமல் பயன்படுத்தவும், பண்ணை குடும்பத்தின் வருமானத்தையும் மற்றும் பண்ணையில் பெண்களின் ஈடுபாடு அதிகரிக்கவும் செய்வதே இதன் நோக்கமாகும்.

தற்போதைய சூழ்நிலையை புரிந்துகொள்ள திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள எதவா கிராம பஞ்சாயத்தில் வயல் அடிப்படை ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் 70 சதவிகிதத்தற்கும் மேல் பெண்கள் ஒரு நாளைக்கு 1.5 - 2 மணி நேரங்கள் உற்பத்தி செயல்பாடுகளுக்கு செலவிடுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் முக்கியமாக பெண்கள் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்கள் அல்லது அலுவலக பொறுப்பாளர்களாக இருக்கின்றனர். பெண்களை பொருத்தவரையில், குடும்பத்திற்கு தேவையான சத்தான மற்றும் பாதுகாப்பான உணவை உற்பத்தி செய்வதும், சிறு தொழில்கள் மூலம் வருமானம் பெறுவதும், விவசாயத்தின் நோக்கமாக கருதுகின்றனர். இந்தக் காரணிகளை

பெண்களை பொருத்தவரையில், குடும்பத்திற்கு தேவையான சத்தான மற்றும் பாதுகாப்பான உணவை உற்பத்தி செய்வதும், சிறு தொழில்கள் மூலம் வருமானம் பெறுவதே, விவசாயத்தின் நோக்கமாக கருதுகின்றனர்.

கருத்தில் கொண்டு, வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறும் விளைபொருட்களை, பண்ணையிலேயே மதிப்பு கூட்டும் செயல்பாட்டை ஒருங்கிணைத்து, ஒரு திட்டம் வடிவமைக்கப்பட்டது. வேளாண்மைத் துறை, தொழில் துறை, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் வங்கிகள் ஆகிய அமைப்புகளிடமிருந்து நிதியுதவியும், பொருளுதவியும் பெறப்பட்டது.

பஞ்சாயத்து அளவில் ஒவ்வொரு பட்டத்திலும் கிடைக்கும் பண்ணை பொருட்களின் அளவு குறித்த தகவலை சேகரித்து, அதன் அடிப்படையில் மதிப்பு கூட்டுதல் தொழிலை திட்டமிட்டு, பஞ்சாயத்து அளவில் முடிவு செய்யப்பட்டது. தேங்காய் (10 பொருட்கள்), பலாப் பழம் (23 பொருட்கள்), கிழங்கு வகைகள் (4 பொருட்கள்), காளான்கள் (புதிய மற்றும் 2 பொருட்கள்) பண்ணை அளவில் பச்சை நிற பூஞ்சாணம் பெருக்கும் அமைப்பு பல்வேறு மதிப்பு கூட்டுதல் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஆறு பெண் விவசாயிகளின் உப-குழுக்கள் உருவாக்கப்பட்டது - தென்னை பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளின் ஒன்றான காண்டாமிருக வண்டுகளின் இனபெருக்க இடத்தை அழிக்கும் உயிர்க் கொல்லி, மண்புழு உரம் (பொட்டலமிட்டது) மற்றும் சாணம் (உளர வைத்து, பொட்டலமிட்டது) ஆகியவை உற்பத்திக்காக உருவாக்கப்பட்டது. இந்தக் குழுக்கள்அனைத்தும், பதிவு செய்யப்பட்ட எதவா பெண்களின் சங்கமாக, 2010 ஆம் ஆண்டு கூட்டமைக்கப்பட்டது. பல வல்லுநர்களிடமிருந்து விவசாயம், அதை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் பொருட்களை பொதுவுடைமையாக்கப்பட்ட விற்பனை ஆகியவை எதவா பெண்களின் சங்கம் எடுத்த செயல்பாடுகளில் சிலவற்றோடு புதிய இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



*நல்ல சந்தைக்காக பலாப்பழங்களை பதப்படுத்தும் பெண்கள்*

## திறன் வளர்த்தல்

கிராமத்தில், எதவா பெண்களின் சங்க உறுப்பினர்கள், புதிய கிராம பயிற்சி மையத்தின் மூலம் பண்ணை விளைபொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து செயல் பயிற்சியளிப்பதற்காகவே ஆகும். துவக்கத்தில் ஐ.சி.ஏ.ஆர்-ன் கீழ் மத்திய மரப்பயிர்கள் ஆராய்ச்சி மையம் மற்றும் வேளாண் துறை பல்வேறு பயிற்சிகள் நடத்தியது. பல்வேறு மையங்களின் வல்லுநர்கள், பதப்படுத்துதலில் புதுமை படைத்தவர்கள் ஆகியோரை தகவல் ஆதாரங்களாக பயன்படுத்தப்பட்டது.

பண்ணை விளைபொருட்களை மதிப்பு கூட்டுதல் குறித்து பல்வேறு திறன்களில் சுமார் 200 பெண் விவசாயிகளுக்கு முழுமையாக பயிற்சியளிக்கப்பட்டது. அவர்களில், ஆறு பிரிவுகளில் மதிப்பு கூட்டுதலில் தேர்ந்த 100 விவசாயிகளை, உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம், விடாமுயற்சி, ஒன்றிணைந்து செயல்படுதல், ஈடுபாடு மற்றும் ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த விவசாயிகளில், முதிர்ந்த பயிற்சியாளர்களாக ஆறு பெண்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தொடர்பு கொள்ளுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் விற்பனை குறித்த திறன்கள் குறித்து யாவும் சிறப்பு பயிற்சிகள் மூலம் அளிக்கப்படுகிறது. அவர்கள் முதிர்ந்த பயிற்றுனர்களாக, கேரளாவில் உள்ள ஏழு மாவட்டங்களில் இருக்கும் 6000 த்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.

முதிர்ந்த பயிற்றுனராக அவர்களின் போக்குவரத்துகளும், சமூக நிலையும் தகவல் தேடும் ஆர்வத்தோடு உயர்ந்தது. *“எங்களால் தொடர்பு கொண்டு இத்தனை விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டுதல் குறித்து பயிற்சியளிப்போம் என்று நாங்கள் என்றுமே நினைத்ததில்லை. எங்கள் எதவா பெண்கள் சங்கத்தின் மூலம் நாங்கள் உண்மையாகவே பெருமையடைகிறோம்”,* என்று ஒரு பயிற்றுனர் கூறுகிறார்.

## வெளிப்பாடுகள்

இந்தத் திட்டத்தின் வெற்றி அனைத்து குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் யாவரும் இந்த குழுக்களின் அங்கமாக மாறிவிட்டனர். சங்க

உறுப்பினர்களுக்கு வருடம் முழுவதும் பகுதி நேர வேலை (ரூ. 600-3500/- ஒரு மாதம் ஒரு உறுப்பினருக்கு) மற்றும் சமூகத்தின் பாராட்டும் கிடைக்கிறது. மதிப்பு கூட்டுதல் மூலம் தேங்காய்க்கு ரூ. 2-20/-, பலாவிற்கு ரூ. 80-300/- மற்றும் காளானுக்கு ரூ. 10-30/- வரை பெறுகின்றனர். இந்த மையங்களிலிருந்து கிடைக்கும் இயற்கை கழிவு மண்புழுவாக மாற்றி அதனை ஒரு கிலோவிற்கு ரூ.12 /- என விற்கப்படுகிறது. வருமானத்தில் உள்ள மொத்த உயர்வு 30-40 சதவிகிதம் ஆகும். உள்ளூர் சுய அரசு நிலைத்தத்தன்மையை உறுதிபடுத்தும் வகையில் விற்பனைக்கு தேவையான பொருட்களை வளர்க்க உதவியது. பெண் குழு உறுப்பினர்கள் பண்ணையிலேயே புது யுக்தியை பயன்படுத்தி, 45மூ செலவை குறைத்தும், 30மூ உற்பத்தி நேரத்தை குறைத்து பச்சை நிற பூஞ்சாணத்தை வளர்க்க முடிந்தது.

"இந்த மாதிரிகள் பெண்களுக்கு ஏற்றது. சிறு குறு வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி பொருட்கள் அதிகமாக மீறுவதில்லை, ஆனால் கிராமப் பகுதிகளில் உள்ள மதிப்பு கூட்டப்படும் மையத்திற்கு, சிறிது சிறிதாக சேகரித்து தேவையான அளவிற்கு அளிக்கலாம். பெண் விவசாயிகள் விளைபொருட்களை சேகரிப்பதற்கு சுலபமாக பொறுப்பேற்க தோள் கொடுத்தனர்" என்று திருமதி. சுலேகா, எதவா பெண்கள் சங்கத்தின் தலைவர் கூறுகிறார். எதவா பெண்கள் சங்கத்தின் வெற்றி குறித்து அனைத்திந்திய வானொலி, தூர்தர்ஷன், இதர தொலைக்காட்சி சேனல்களிலும் மற்றும் அச்சு ஊடகத்திலும் பரப்பப்பட்டது.

இயற்கை ஆதாரங்கள் மற்றும் பண்ணையில் உள்ள பயிர்கள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றிலிருந்து பெறும் கழிவுகளை கொண்டு மறுசுழற்சி செய்து, அதன் மூலம் பாதுகாப்பான உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. பசுந்தழை உரங்கள், மக்கு மற்றும் தொழு உரம் அதனுடன் சாம்பல் ஆகிய அனைத்தும் சமையலறையிலிருந்து சுலபமாக கிடைப்பதால் பெண்கள் இவற்றை தேர்வு செய்கின்றனர். பல்வேறு காரணிகளை ஒருங்கிணைப்பதால் சமையலறை கழிவுகள் குறைவதோடு சுற்றுப்புறச்சூழல் தூ ய்மையாக இருக்கிறது. வீட்டைச் சுற்றி நன்றாக திட்டமிட்டு அடர்வாக சாகுபடி செய்யும் இந்த முறை, பெண்களுக்கு மிக சிறப்பான முறையில் நேர மேலாண்மை செய்வதற்கு வாய்ப்பளிக்கிறது. வீட்டு வேலைகளை செய்துகொண்டே பயிர்கள், விலங்குகள் மற்றும் பறவைகளை கண்காணித்தல். புதிய பண்ணை உற்பத்தி பொருட்களை, பல மையில்கள் செல்லாமல் பாதுகாப்பான உணவு தயாரிக்கப்படுகிறது.

■

**Anithakumari P**
Principal Scientist (Agricultural Extension)
ICAR - Central Plantation Crops Research Institute
Regional Station, Krishnapuram P.O.
Kayamkulam- 690 533, Kerala.
E-mail: anithacpcri@gmail.com

**V Krishnakumar**
Head, ICAR - Central Plantation Crops Research Institute,
Regional Station, Krishnapuram P.O.
Kayamkulam- 690 533, Kerala.
E-mail: dr.krishnavkumar@gmail.com

மூலம்: லீசா இந்தியா, டிசம்பர் 2015, வால்யூம் 17, இதழ் 4

# வேளாண் உயிர்ச்சூழல்வியல் - வளத்திற்கு வழி

தர்மபுரி மாவட்டத்தில், பென்னாகரம் வட்டத்தில், நல்லம்பட்டி கிராமத்தில் வாழும் திருமதி. ரேவதி, ஒரு இளம் விவசாயி. இவரது குடும்பத்திற்கு விவசாயம் ஒரு முக்கிய வாழ்வாதாரம் என்றாலும், இவரின் கணவர் அருகில் உள்ள சிறுநகரில் ஓட்டுனராக பணிபுரிவதை முக்கியமாக எண்ணுகிறார். ஏனென்றால் ஒரு ஏக்கர் மானாவாரி நிலத்தில் கிடைக்கும் வருமானம் குடும்பத்திற்கு போதவில்லை. நிலத்தை தரிசாக விட மனமில்லாமல், ரேவதி தனது ஒரு ஏக்கர் மானாவாரி நிலத்தில் சாகுபடி செய்து வந்தார். சாதாரண முறையில் சாகுபடி செய்து வந்த அவருக்கு, பெரும்பாலும் ஒரு பயிரை வெற்றிகரமாக மகசூல் எடுப்பதற்கு பல பிரச்சனைகளை சந்தித்து வந்தார். வெளியிடு பொருட்களை சார்ந்திருப்பதால் உற்பத்தி செலவும் அதிகமாக இருந்தது. உற்பத்தி திறன் பாதிக்கப்பட்டு, மண்ணின் ஆரோக்கியமும் நாளடைவில் குறைந்துவிட்டது.

2011 ஆம் ஆண்டு, ஏ.எம்.இ. நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த விவசாய வயல்வெளிப் பள்ளி திட்டத்தில் பங்குபெறுவதற்கான வாய்ப்பு, ரேவதிக்கு கிடைத்தது. துவக்கத்தில் 20 இளம் பெண்கள் கொண்ட குழு ஒன்று ஒருங்கிணைக்கப்பட்டது. இந்தப் பெண்கள் ஏற்கனவே சுய உதவிக் குழுவில் ஈடுபட்டு சேமித்தும், கடன் பெற்றும் வருகின்றனர். முதலில் பெண்களுக்கு நிலைத்த வேளாண்மை குறித்த பயிற்சி அளிக்கபட்டது, பின்னர் விவசாயியை வழிநடத்துனர்களாக்குவதற்கு பயிற்சியளிக்கப்பட்டது.

விவசாய வயல் வெளிப்பள்ளியில் கற்றுக்கொள்ளும்போது, தன்னுடைய வயலில் ரேவதி பல உயிர்ச்சூழல் தொழில்நுட்பங்களை செயல்படுத்தினார். மழை நீரை சேமிக்கும் நோக்கோடு சரிவுக்கு குறுக்கே உழவு செய்தார், மண் வளத்தை அதிகரிப்பதற்கு பசுந்தாள் உரத்தை மடக்கி உழவு செய்ய வேண்டும். இதற்காக முக்கிய பயிர் சாகுபடி செய்வதற்கு முன், சனப்பை விதையை, இலைதழைகள் உற்பத்தி செய்வதற்கு விதைத்தார். அவர், உயிரூட்டப்பட்ட தொழுஉரத்தை ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா, எதிர்உயிரியான ட்ரைகோடெர்மா விரிடி போன்றவைகளை கலந்து வயலில் இட்டார்.



*வீட்டின் பின்புறத்தில் வளர்க்கும் தீவனப்பயிர்களுடன் ரேவதி.*

பூச்சிகளை கட்டுபடுத்துவதற்கு, குறிப்பாக நிலக்கடலையில் பெரும் சேதம் ஏற்படுத்தும் சாறு உறிஞ்சும் பூச்சியான, எபிட்ஸ் ஈர்க்க, குறைந்த செலவுடைய மஞ்சள் ஒட்டு பொறியை கண்டுபிடித்து வயலில் நிறுவினார். சாறு உறிஞ்சும் பூச்சிகளை தடுக்க சோளப்பயிரை ஓரப்பயிராக வளர்த்தார். புழுக்கள் பயிரை தாக்காமல் தடுக்க, ஆமணக்கு பயிரை ஓரப்பயிராக வளர்த்தார். இதனால் பூச்சிகொல்லிகளை நிறுத்தினார்.

துவரை மற்றும் காராமணி ஆகியவற்றை நிலக்கடலைக்கு ஊடுபயிராக விதைத்ததனால் சாகுபடியில் பல்வகைமையை ஏற்படுத்தியதால் பிரச்சனைகளையும் குறைத்தார். பண்ணையில் உள்ள பல்வகைமை, அவர்களது பண்ணை மற்றும் வாழ்வாதாரங்களில் வளைந்துகொடுக்கும் தன்மை உயர்வது மட்டுமில்லாமல், நல்ல மகசூல் பெற்று வருமானமும் அதிகரித்தது. நம்பமுடியாத அளவிற்கு மானாவாரி நிலத்தில், ரேவதி ரூ.85000 ஈட்டமுடிந்தது. உற்பத்தி செலவும் ரூ.3450 வரை குறைந்தது. ரேவதி, தன்னுடைய பண்ணையில் பல இதர பண்ணை சார்ந்த தொழில்நுட்பங்கள் செய்து வந்தார். அவர் 13 வகையான காய்கறிகளை விதைத்து அதன் மூலம் வாரத்திற்கு ரூ.1000 மதிப்புள்ள விளைபொருட்களை அறுவடை செய்தார். தீவன வங்கி மற்றும் அசோலா வளர்ப்பு கால்நடைக்கு தொடர்ந்து தீவனம் அளித்து வந்தது. இரண்டே படுக்கை அமைத்து ரேவதி காளான் வளர்ப்பையும் செய்ய துவங்கினார். காய்கறிகள், பால் மற்றும் காளான் யாவும் ஆரோக்கியமான சத்துக்கள் நிறைந்த உணவை அளிக்கிறது. அளவுக்கு அதிகமாக கிடைப்பதை விற்று தொடர்ந்து வருமானமும் ஈட்டினார்.

ரேவதி, அவர் எடுத்த முயற்சிகளுக்கு அவர் பெருமைபடுகிறார். தனது பண்ணையை நிலைத்ததன்மை அடைந்ததற்கும், ஆரோக்கியம் மற்றும் சத்துக்கள் நிறைந்த உணவை அளித்ததற்கும், கால்நடைகளுக்கு தீவனமும் மற்றும் வீட்டிற்கு வருமானமும் கிடைத்ததில் வெற்றி பெற்றதாக நினைக்கிறேன். இவரின் திறன் மற்றும் விழிப்புணர்வை கொண்டு, தற்போது உயிர்ச்சூழல் வேளாண்மை பயிற்றுனராக இருக்கிறார்.

This article has been developed by **J. Krishnan.** He can be contacted at josephkrish@rediffmail.com
**Smt. K Revathi** can be contacted at Door.No. 3/1A, Nallampatti village, B. Agraharam, Pennagaram taluk, Dharmapuri district, TamilNadu - 636 813

■

மூலம்: லீசா இந்தியா, டிசம்பர் 2015, வால்யூம் 17, இதழ் 4

# உணவு இறையாண்மை: தமிழ்நாட்டின் நீர்பாசன வசதியுள்ள நெல் சாகுபடி முறைகளுக்கு செம்மை நெல் சாகுபடி அடித்தளமிடுகிறது.

**வி.கே. ரவிச்சந்திரன், கே. ஆர். ஜெகன் மோகன் மற்றும் பி.ஜே. பாண்டியன்**

***செம்மை நெல் சாகுபடி என்று அழைக்கப்படுகிற புதிய வகை நெல் சாகுபடி முறையை பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்களில் முன்னோடியான தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் முன்னெடுத்து செயல்படுத்தியது. நன்கு வடிவமைக்கப்பட்ட அணுகுமுறைகள் வாயிலாக அது செம்மை நெல் சாகுபடி முறையை தமிழ்நாட்டில் உள்ள நீர்பாசன வசதியுள்ள நெற்சாகுபடி பயிரிடக்கூடிய பெரும்பான்மையான இடங்களுக்கு பரவலாக்கியது.***

செம்மை நெல் சாகுபடி (SRI) என்பது எளிதான, ஒன்றுக்கொன்று உதவக்கூடிய செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட புதிய முறையாகும். இதன் முக்கிய குறிக்கோள் எளிதான வழியில், அதே நேரம் குறிப்பிட்ட வழியில் நெற்பயிரையும், மண், நீர் மற்றும் சத்துக்களை மேலாண்மை செய்வதை மாற்றியமைப்பதாகும். செம்மை நெல் சாகுபடியின் வெற்றி என்பது ஐந்து முக்கியமான வழிமுறைகளை உறுதியாக செயல்படுத்துவதை பொருத்தே அமைகிறது. அவை: இள நாற்றுகளின் உற்பத்தி, ஒரு நாற்றினை நடவு செய்தல், சதுர முறையில் நடுதல், நீர் மேலாண்மை செய்வது மற்றும் களையெடுக்கும் கருவியை பயன்படுத்துவதாகும். ஐந்து முக்கியமான வழிமுறைகளில் இள நாற்றுகளை வளர்த்தெடுப்பதும், தனித்தனியாக ஒற்றை நாற்றுக்களை நடுவது, சதுர வடிவில் நடுவது, தமிழ்நாட்டில் உள்ள நீர்பாசன வசதியுள்ள நெல் பயிரிடும் பகுதிகளில் உணவு இறையாண்மைக்கு வழி அமைத்துக் கொடுக்கிறது. செம்மை நெல் சாகுபடி முறையானது உற்பத்தி பெருக்க சூழலில் புதிய முறையாக இருப்பதால், அநேக நிறுவனங்களால் ஆதரவு தரப்படுகிறது. பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்களில் முன்னொடியான தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உலக வங்கியின் உதவியோடு கூடிய தமிழ்நாடு - ஐயம்வாம் (தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கும் மற்றும் நீர் நிலைகள் புதுப்பித்தல் மற்றும் மேலாண்மை) திட்டத்தின் மூலம் முன்னெடுத்து செயல்படுத்தியது.

**பில்லேகுத்தர் கிராம கதை:**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் செம்மை நெல் சாகுபடி முறையை கிருக்ஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பில்லேகுத்தர் என்ற கிராமத்தில் அறிமுகப்படுத்தியது. பில்லேகுத்தர் கிராமமானது ஓசூர் - கிருக்ஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கிராமமாகும். இக்கிராமம் அதன் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையையே பிரதானமாக நம்பியுள்ளது. கிருக்ஷ்ணகிரி ஒரு புதிய மாவட்டமாகும். பின்தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட மாவட்டமாகும். இக்கிராமம் கீழவரப்பள்ளி அணைக்கட்டில் வரும் ஆயக்கட்டு பகுதியை சார்ந்ததும் (பெண்ணையார் ஆறு) அங்கு நெல் பயிரே முதன்மையான பயிராக பயிரிடப்பட்டும் வருகிறது. சாதகமான தட்ப வெப்ப சூழ்நிலைகள் காரணமாக நெற்பயிர் மட்டுமல்லாமல் காய்கறி பயிர்களும் பயிரிடப்படுகிறது. இங்குள்ள விவசாயிகள் மொழிவாரியாக மைனாரிட்டி மக்களாகவும், ஓரே சமுதாயத்தை சேர்ந்தவர்களாகவும் இருப்பதால் ஒருவருக்கொருவர் ஏதாவது ஒரு வழியிலோ அல்லது மற்ற வழியிலோ உறவு கொண்டுள்ளனர்.

செம்மை நெல் சாகுபடி முறையில் மிகவும் கடினமான பகுதி என்னவென்றால், இள வயது நாற்றுக்களை வளர்த்தெடுப்பதும், அவற்றை 14-15 நாட்களில் பறித்து சதுர வடிவில் 25 செ.மீ.க்கு 25 செ.மீ. இடைவெளியில் நடுவதுமாகும். பழைய முறை நெல் சாகுபடி முறையில் அங்குமிங்குமாக 25-30 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை ஒரு குத்தில் 8 முதல் 10 நாற்றுக்களை நடுவது வழக்கம். இம்முறையில் ஒரு ஹெக்டேருக்கு தேவைப்படும் விதை தேவை 8 கிலோ மட்டுமே. ஆனால் பழைய முறையில் விதைப்பதற்கு ஒரு ஹெக்டேருக்கு தேவைப்படும் விதை அளவானது 70 முதல் 80 கிலோ விதை ஆகும். கல்வியறிவு குறைவான மற்றும் ஆரம்பக் கல்வியறிவு மட்டுமே கொண்ட பெண் கூலியாட்கள், பழைய முறையில் நாற்றுக்களை நடுவதில் பழக்கம் அதிகம். செம்மை நெல் சாகுபடி முறையில் நாற்றுக்களை நடுவதற்கு பழக்குவது மிகவும் கடினமான வேலையாக இருந்தது.

குறைந்த வள ஆதார குடும்ப பின்னணியில் இருந்து வந்த பெரும்பாலான கூலி விவசாயிகளுக்கு

## சமூக அளவில் நெல் நாற்றங்கால் அமைப்பது ஒரு சிறந்த வழி:

ஒரு செண்ட் நிலப்பரப்பில் நாற்றங்கால் அமைப்பது 1 ஏக்கர் நிலத்திற்கு நட தேவைப்படும் நாற்றுக்களை உற்பத்தி செய்ய போதுமானது. ஆனால் ஆரம்ப காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பாய் நாற்றங்கால் முறையானது அதிக தொழிற்நுட்பம் நிறைந்தாகும். இது நன்கு தேர்ச்சி பெற்ற கள உதவியாளர்களின் வடிவமைப்பிலும், கண்காணிப்பிலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயியையும் கிராம அளவில் பயிற்றுவிப்பதற்கு பதிலாக, புதிய முயற்சியாக விழுப்புரம் மாவட்டம் பாம்பூர் என்ற கிராமத்தில் சமூக அளவில் நெல் நாற்றங்கால் என்ற கருத்தாக்கம் உருவானது. தற்செயலாக, விழுப்புரம் மாவட்டமானது நீர் பற்றாக்குறை நிறைந்த பகுதியாகவும், பெரும்பாலான வளம் குன்றிய உழவர்களை கொண்ட பகுதியாகவும் அமைந்திருந்தது. சமூக அளவிலான நாற்றங்காலில் 15 முதல் 20 உழவர்களின் வளங்கள் ஒன்றாக திரட்டப்பட்டு அவர்களுக்கு தேவையான நாற்றுகள் ஒரே இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. இது நாற்றுகளை நன்கு வளர்க்கவும், அருகிலிருந்து கூர்ந்து கண்காணிக்கவும் உதவுகிறது. 14 ஆம் நாளில் நாற்றுகள் பறித்தெடுக்கப்பட்ட இதில் பங்கேற்ற அனைத்து உழவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

செம்மை நெல் சாகுபடி முறையின் செயல் திறன்: (கிலோ/ஹெக்டேருக்கு)

தமிழ்நாட்டில் 7037 ஹெக்டேரில் 16 இடங்களில் எடுக்கப்பட்ட மகசூல் அளவு.

ஆதாரம்: தமிழ்நாடு - ஐயம்வாம் திட்டம், த.வே.ப.க., கோயம்புத்தூர்

செம்மை நெல் சாகுபடி முறையானது அரிசி உற்பத்தியை 33 விழுக்காட்டிற்கும் அதிகமாக உயர்த்த உதவியுள்ளது. உழவர்கள் கூடுதல் வருவாயாக 35 விழுக்காடு அளவு கூடுதலாக பெற்றுள்ளனர். காய்ச்சலும். பாய்ச்சலும் என்ற முறையில் நீர் பாய்ச்சியதால் அவர்களால் 33 விழுக்காடு நீரை சேமிக்க முடிந்தது. செம்மை நெல் சாகுபடி முறையில் பின்பற்றப்பட்ட சமூக அளவிலான கூட்டுச் செயல்பாடுகளால் சமூக அளவில் உறவுகள் மேம்பட உதவின.

இதன் இயல்பான உற்பத்தி திறன் அதிகரிப்பால் செம்மை நெல் சாகுபடி முறையானது உழவர்களுக்கு நெல் சாகுபடி முறையில் தங்களுக்கு உள்ள உரிமையை நிலைநாட்டி தங்களுக்கு தேவையான உணவு மற்றும் வேளாண் முறைகளை வகுத்துக்கொண்டு உணவு இறையாண்மையை அடைவதற்கு ஏற்ற வழியாக அமைந்தது. மாநில அளவில் 43896 ஹெக்டேர் நெல் சாகுபடி பரப்பு இந்த புதிய முறை நெல் சாகுபடி முறையில் கொண்டு வரப்பட்டுள்ளது. இங்ஙனம், உணவு, சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வழியிலும். நிலைத்த தன்மை கொண்டும் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுவே உடல் நலத்திற்கும், கலாச்சார ரீதியாக பொருத்தமாகவும் அமைகிறது.

| செம்மை நெல் சாகுபடி | | | பழைய நெல் சாகுபடி முறை | | | கூடுதல் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| குறைந்தது | அதிகப்படியானது | சராசரி | குறைந்தது | அதிகப்படியானது | சராசரி | |
| 8047 | 6477 | 7275 | 6048 | 4708 | 5375 | 35.3 |

நாற்றுக்களை நடவு செய்யும் முறைக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பிறகு நாற்றுக்கள் நடும் சமயத்தில் நன்கு பயிற்சி பெற்ற கூலியாட்களுக்கு இடையில் இரண்டிலிருந்த மூன்று பயிற்சி பெறாதா கூலியாட்களையும் வைத்துக்கொண்டு நடும்போதே பயிற்சியை அளித்து, அவர்கள் நடும் முறைகள் அவ்வப்போதே கண்காணிக்கப்பட்டன. இக்கூலி விவசாயத் தொழிலாளர்கள் இதில் நன்கு பயிற்சி பெற்றதன் காரணமாக இடைப்பட்ட காலத்தில் புதிய உத்திகளை தாங்களாகவே கண்டு பிடித்து செயல்படுத்தினர். குறிப்பாக முன்பெல்லாம் கை நிறைய நாற்றுக்கட்டுகளை வைத்துக்கொண்டு நடுவார்கள்.

செம்மை நெல் சாகுபடி முறையில் நாற்றுக்களை தனித்தனியாக பிரித்து எடுத்து நடுவதற்கு வசதியாக குறைவான அளவு கொண்ட நாற்றுக் கட்டுகளை வைத்து நட ஆரம்பித்து நடும் முறைகளை எளிதாகவும், விரைவாகவும் முடிக்கும் அளவிற்கு தேர்ச்சி பெற்றனர். முதல் முறை இந்தமுறையில் 20 கூலி ஆட்களை கொண்டு 1.80 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை 4 மணி நேரத்தில் நட்டு முடித்தனர். செம்மை நெல் சாகுபடியில் முக்கியமான பகுதி என்னவென்றால் கூலி ஆட்களின் தேவையானது 50 விழுக்காடு குறைந்தது.

பழைய முறையில் 1 ஹெக்டேர் நிலத்தில் நாற்று நடுவதற்கு 40-45 கூலி ஆட்கள் தேவைப்படும் பட்சத்தில் செம்மை நெல் சாகுபடி முறையில் 20-22 கூலி ஆட்களே தேவைப்பட்டது. அந்த பருவத்தில் செம்மை நெல் சாகுபடி முறையானது நன்கு

கவரப்பட்டு, அடுத்த பருவத்தில் மற்றவர்களுக்கு வழி காட்டும் நபர்களாக செம்மை நெல் சாகுபடியில் தேர்ச்சி பெற்ற முக்கிய நபர்களை கொண்ட குழுவினர் விளங்கினர். ஆக செம்மை நெல் சாகுபடி முறையானது, மக்கள் தாங்கள் விரும்பும் உணவு மற்றும் வேளாண் சாகுபடி முறைகளைத் தேர்ந்தெடுக்கவும், நிலைத்த தன்மை கொண்ட வழியில் உணவு இறையாண்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவும் வழிகோலியது.

களைகளைக் கட்டுப்படுத்த ”கோனோவீடர்” என அழைக்கப்படும் களையெடுக்கும் கருவியை 4 முறை பயன்படுத்த வேண்டும். அதாவது நாற்றுகள் நடப்பட்ட பிறகு 15 ஆம் நாளில் இருந்து 45 ஆம் நாள் வரை 10 நாட்களுக்கு ஒரு முறை பயன்படுத்த வேண்டும். இம்முறையில் களைகள் பிடுங்கப்பட்டு மண்ணிலே திரும்ப அமுக்கப்படுவதால் மண்ணுக்கு கிடைக்க வேண்டிய இயற்கை தழைகள் கொடுக்கப்பட்டு மண் வளப்படுத்தப்படுகிறது. களைகள் நன்கு பராமரிக்கப்படுவதால் ஒவ்வொரு குத்திலும் பயனுள்ள சிம்புகள் அதிகம் வருவதற்கு உதவுகிறது. களையெடுக்கும் கருவிகள் அதிகம் பயன்படுத்தப்படுவதால் வலிமையான புதிய வெண்ணிற வேர்கள் உற்பத்தியாகி அவை செடிக்கு தேவையான சத்துக்களை சிறந்த முறையில் எடுத்துக் கொடுக்க உதவுகின்றது. பண்ணையில் உள்ள பெண்கள் கோனோவீடர் களையெடுக்கும் கருவியை இயக்குவதில் கற்றுத் தேர்வதால் களையெடுக்கும் பணியும் எளிதாகிறது. இதன் மூலம் களையெடுப்பதில் ஏற்படும் செலவில் 30 விழுக்காடு குறைகிறது.


## நன்றி:

இக்கட்டுரையின் ஆசிரியர்கள் உலக வங்கியின் உதவியோடு பல துறைகள் சம்மந்தப்பட்ட தமிழ்நாடு - ஐயம்வாம் திட்டத்தில் பணி புரிபவர்கள் ஆவார். தமிழ்நாட்டில் செம்மை நெல் சாகுபடி பரவலாக நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்த இந்தத் திட்டத்திற்கு தங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர். மேலும் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த உதவிய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கும் தங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர்.


■


**Dr. V.K.Ravichander, Dr. K.R.Jagan Mohan and Dr. B.J.Pandian**
TamilNadu Agricultural University
TamilNadu - IAMWARM Project (World Bank fund)
Email: vkr9999@yahoo.com



மூலம்: லீசா இந்தியா, டிசம்பர் 2009, வால்யூம் 11, இதழ் 4



# www.leisaindia.org

A website for learning and sharing experiences on LEISA practices

**Main Features**

- Space to share your LEISA experience.
- A source for LEISA practices followed by farmers.
- An archive of LEISA India magazines—English edition and regional editions (Kannada, Tamil, Hindi, Telugu, Oriya, Punjabi and Marathi)
- Photos and videos on LEISA practices.
- Interesting cases of people following LEISA practices.




Follow us on Facebook: www.facebook.com/Leisaindiamag
Follow us on Twitter: @LeisaIndia

# சமூக முயற்சியின் மூலம் உணவு உத்திரவாதமின்மையின் சவாலை சந்தித்தில்

**டி.கே. ஓமனா**

***திறன் மற்றும் நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் பெண்களை சக்திவாய்ந்தவர்களாக ஆக்குதல், இருக்கும் திறன்களை பயன்படுத்துவது, தேவையான இடத்தில் உதவி அளிப்பது மற்றும் மறுசுழற்சி மூலம் அனைத்து பண்ணை செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகிய காரணிகள் யாவும், கேரளாவில் உள்ள இந்த ஏழை பெண்களை வறுமையிலிருந்து வெளிகொணர்ந்தது.***

கேரளாவில் பெண் விவசாயிகள், நெல், கிழங்குகள் மற்றும் காய்கறிகள் ஆகியவை முழுமையாக சாகுபடி செய்வதில் ஈடுபட்டிருந்தனர். 1970 ஆம் ஆண்டுகளில் வாழ்க்கை பயிர்களான - நெல் மற்றும் கருணைக் கிழங்கிலிருந்து, பணப்பயிர்களான கரு மிளகு, காப்பி, இஞ்சி மற்றும் ரப்பர் ஆகியவற்றிற்கு பெரும் மாற்றமடைந்தது. குறைந்த மண் மற்றும் தண்ணீர் சேமிப்பு தொழில்நுட்பங்களோடு இணைத்து தொடர்ந்து வேளாண்மை செய்ததனால் வேளாண் உற்பத்தி குறைந்தது. கடந்த பத்து ஆண்டுகளில், அதிகரித்த பூச்சி தாக்குதல்,நோய்கள் மற்றும் சரிந்துவரும் விலைகள் அனைத்தும், அதிகரித்த உற்பத்தி செலவும் சேர்ந்து உள்ளூர் சாகுபடியில் பிரச்சனை ஏற்பட்டு இதனால் விவசாயிகள் மற்றும் இதர பணியாளர்கள் தொடர்ந்து வறுமை நிலை அடைகின்றனர்.

2004 ஆம் ஆண்டு, ரஸ்தா என்ற அமைப்பு, வயநாடு மாவட்டத்தில் உள்ள இரண்டு பஞ்சாயத்துகளில் (உள்ளூர் நிர்வாகப் பகுதி) ஆய்வு நடத்தியது, அதில் உணவு பயிர்களில் 90 சதவிகிதப் பெண்கள் கூலியாட்களாக பணியாற்றுகின்றனர் என்று காட்டுகிறது. ஆனால் சாகுபடியில் உணவுப் பயிர்களிலிருந்து (நெல்) பணப்பயிர்களுக்கு (வாழை) மாறியதன் விளைவாக பெண் கூலிகளின் நிலையும் மாறியது. வயநாடு மாவட்டத்தில் ரஸ்தா அமைப்பினால் சமீபகால மதிப்பீடு காட்டியது என்னவென்றால் நெல் சாகுபடி 40000 ஹெக்டேரிலிருந்து 12000 ஹெக்டேராக சுருங்கிய பின்னர், பெண்கள் ஒரு பட்டத்தில் கிட்டதட்ட 1,500,000 பணி நாட்கள் நெல் சாகுபடியின்போது தொலைத்தனர் என்பதுதான்.

பெண்கள், வேளாண் பணிகளை நாளடைவில் குறைத்ததனால், அவர்களின் சார்புத்தன்மை அதிகரித்து, அதனால் அடிப்படை பொருளாதார தேவைகளுக்கும் தங்களது கணவரிடமே எதிர்ப்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மேலும் குடும்ப அளவில் உணவு உத்திரவாதமின்மையை உருவாக்கியுள்ளது. சமீபகாலமாக விவசாய தற்கொலைகள் அதிகரித்து வருவதனால் பெண்களின் தோள்களில், குடும்பத்தை மேம்படுத்துவது, குழந்தைகளின் கல்வி மற்றும் இதர குடும்ப தேவைகள் ஆகிய பொறுப்புகள் சுமக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

**முதல் முறையாக இந்த குடும்பங்களுக்கு பால் இருப்பு இருக்கிறது, மேலும் உறுப்பினர்களின் ஆரோக்கியம் உயர்ந்திருக்கிறது.**

### சக்திவாய்ந்த பெண்களாக்குதல்

ரஸ்தா நிறுவனம் வயநாடு மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டிலிருந்து கிராம மக்களின் பிரச்சனைகளை தீர்வு காணும் பணியில், குறிப்பாக பெண்கள், பாரம்பரிய சமூகங்கள் மற்றும் குறு விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பணியில் ஈடுபட்டு வருகிறது. பெண்கள் திறன்மிக்கவர்களாக ஆக்குவது, இந்த நிறுவனம் முக்கிய சவால்களில் ஒன்றாக துவக்கிய நாளிலிருந்தே கருதுகிறது. துவக்கத்தில் கிராம மற்றும் பழங்குடியின பெண்களை ஒருங்கிணைப்பதற்காக "சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் குழுக்கள்" ரஸ்தா நிறுவனம் மூலம் 1990 ஆம் ஆண்டு உருவாக்கி, பின்னர் சுய உதவிக் குழுக்களாக மாவட்டத்தில் 12000 ஏழைக் குடும்பங்களுக்கு பரவலாக பரப்பப்பட்டது. 10-15 பெண்கள் ஒன்று கூடுதல், பெரும்பாலானோர் ஒரே எண்ணத்துடன் இருப்போர், ஒரே பொருளாதார பின்னணியில் உள்ளவர்கள் போன்ற காரணிகளைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்தல். இவர்கள் வாரம் ஒரு முறை கூடி சேமிப்பு, அவர்களுடைய உரிமைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடி, கற்றுகொள்கின்றனர். இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குள் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் திடமான தலைமை பண்புகள் மற்றும் ஒன்றுபட்ட செயல்கள் உருவாகிறது. மேலும் இந்த ஒன்றுபட்ட சக்தி, உறுப்பினர்களுக்கு, பெரும்பாலும் புதிய அல்லது மாற்று வாழ்வாதார செயல்பாடுகள் தொடங்குவதற்கான வழிகாட்டியாக அமைகிறது. வருடங்கள் செல்ல செல்ல சுய உதவிக் குழு அணுகுமுறை, பெண்களை சக்திவாய்ந்தவர்களாக ஆக்குவதற்கும், கிராமங்களில் உள்ள வளர்ந்து வரும் உணவு உத்திரவாதமின்மை பிரச்சனைக்கு தீர்வு காணுவதற்கு மிக ஏதுவாக இருந்ததை நாங்கள் கண்டோம். முதன்மை வாழ்வாதார துறையான, வேளாண்மையில், பல பிரச்சனைகளை சந்திப்பதால், ரஸ்தா நிறுவனம் இதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து, நிலைத்த வேளாண் உற்பத்தி முறைகள், அறிவு பரிமாற்றம், கள விரிவாக்க பணி மற்றும் பயிர் பல்வகைமை ஆகியவற்றில் பயிற்சியளித்து இந்த பிரச்சனைக்கு தீர்வு கண்டனர்.

உணவு உத்திரவாதமின்மை மற்றும் வேலையின்மை ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண பெண் விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டம் நடத்தப்பட்டது. இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் தனித்துவம் வாய்ந்த ஒன்றை துவக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினர். சுய உதவி குழுக்களை சேர்ந்த ஐந்நூறு பழங்குடியின மற்றும் இதர குறு விவசாயிகளின் ஏழைக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க முன்வந்தனர்.

### விதை பரிமாற்றத் திருவிழா

குடும்ப உணவுக் கூடையில் காய்கறிகள் பெரும் பங்கு வகிக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன்னரே காய்கறி சாகுபடி, பணப்பயிர்கள் சாகுபடிக்கு மாறியது. இந்த தொழில்நுட்பம் மறுஉருவெடுக்க, ஒரு விதை பரிமாற்றத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டது. விதை பரிமாற்றத் திருவிழா என்பது கிராமத்தில் உள்ள பெண் விவசாயிகள் அவர்களிடம் உள்ள விதைகளை மற்ற விவசாயிகளோடு பரிமாறிக்கொள்வதே இதன் நோக்குமாகும். குறைந்தது ஒரு விதையாவது பெற்றிருந்தால் மட்டுமே விவசாயிகள் இந்த திருவிழாவில் பங்குபெற அனுமதிக்கப்பட்டது.

தொடக்கத்தில், முப்பது குழுக்கள் (300 பெண் விவசாயிகள்) இந்த விதை பரிமாற்ற திருவிழாக்களில் ஈடுபடுத்தப்பட்டனர். விதை பரிமாற்ற திருவிழா, டிசம்பர் மாதம் நெல் அறுவடை செய்த உடனே நடத்தப்படுகிறது. திருவிழாவிற்கு பின்னர், 5-10 உறுப்பினர்கள் கொண்ட பெண் குழுக்கள் சேர்ந்து காய்கறிகள் சாகுபடி செய்வர். இயற்கை உரங்கள், மக்கு மற்றும் மனிதனால் கட்டுபடுத்தப்படும் பூச்சிகள். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மட்டுமே அவர்கள் சோப்பு மற்றும் புகையிலை கலவையை பயன்படுத்துவர் - ஒரு உயிர்ச்சூழலுக்கு உகந்த பூச்சி கட்டுபடுத்தும் முறை. ஒரு மாதத்திற்குள் அவர்கள் அறுவடை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர், முதலில் கீறை வகைகளில் ஆரம்பித்து, பின்னர் மற்ற பயிர்களை அறுவடை செய்வர். மிகுதியான காய்கறிகள் சமூகத்திற்கு நேரடியாக விற்கப்படுகிறது. இது இடைத்தரகர்களை விலக்கி, பெண்களின் குழுக்களுக்கு உறுதியாக அதிக விலை கிடைக்கிறது மற்றும் அதிக தரமான இயற்கை காய்கறிகள், இரசாயன பூச்சிகொல்லிகளிலிருந்து விடுதலை ஆகியப் பயன்கள் கிராம சமூகங்களுக்கு கிடைத்துள்ளது. இந்த செயல்பாடு வீட்டில் உணவு இருப்பு அதிகரித்துள்ளது, மேலும் வெளி உணவை சார்ந்திருத்தலும் குறைந்துள்ளது.

அறுவடையின் போது சிறப்பான தரமிக்க விளைபொருளை விதைபொருளாக சேகரித்து, பாரம்பரிய முறைகளில் பாதுகாத்து அடுத்த விதைத் திருவிழாவில் அதனை பகிர்ந்துகொள்ளப்படும். ஆகையால் பாரம்பரிய இரகத்தை சேமிப்பதற்கும், பரப்புவதற்கும் ஒரு பாரம்பரியம் உருவாக்கப்படுகிறது.

### கால்நடை கொணர்தல்

கால்நடை வாங்குவதற்கு, சுமார் 530 உறுப்பினர்கள் தலா ரூ.20,000 சிறு கடன் பெற்றனர். பெண்கள்



*உறுப்பினர்கள் கூட்டாக சாகுபடி செய்யும் காய்கறிகள்*

குழுவாக அணுகியதால், எந்த பத்திரமும் இல்லாமல் கடன்கள் கிடைத்தது. இங்கு குழு பொறுப்பேற்கிறது, இந்த குழுவே உத்திரவாதம் அளிக்கிறது. இது உள்ளூர் பொருளாதாரத்திற்கும், ஏழை குடும்பங்களுக்கும் சிறந்த ஊட்டமாகும்.

அதிக பால் உற்பத்தி அளிக்கும் பசுக்களை மேம்படுத்துவது குறித்து பெண்களுக்கு செயல்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பகுதி இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியென்பதால், இறக்குமதி உணவின் சார்புத்தன்மை மிகக் குறைவாகவே உள்ளது. மேலும் பண்ணைக் கழிவுகள் தீவனமாக பயன்படுகிறது, ஆகையால் பயிர் உற்பத்தியோடு கால்நடையும் ஒருங்கிணைக்கப்பட்டது.

சராசரியாக, ஒரு பசு ஒரு நாளைக்கு15-20 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறது. மில்மா என்ற அரசு பால் வினியோக நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பால் சேகரிக்கப்படுகிறது. பெண்கள் ஒரு நாளைக்கு ரூ.600 வருமானம் பெற்றனர். கால்நடைகளை வளர்ப்பதற்கான செலவும், கடன் திரும்ப செலுத்துவதற்கும் இது போதுமானதாகும். கால்நடை வளர்ப்பு இந்த பெண்களுக்கு வருமானம் ஈட்டும் நல்ல திட்டமாக உள்ளது.

கால்நடை வளர்ப்பு குடும்பத்திற்கு பல வழிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. சாணம் பயன்பாடு காய்கறி மற்றும் நெல் சாகுபடி உயர்கிறது.

மக்கு எருவிற்கு மிக குறைவான அளவே பயன்படுத்துவதால், மீதமுள்ள சாணம் உயிர் எரிவாயுவிற்கு பயன்படுத்தப்பட்டது. பண்ணை வீடுகளுக்கு ஒரு உயிர் எரிவாயு தொட்டிற்கு ரூ. 5000 (சுமார் 50%)நன்கொடையாக அளிக்கப்பட்டது. மீதியுள்ள தொகை கூலியாட்கள் அல்லது சுய உதவி குழுக்களிடமிருந்து கடன் எடுக்கப்பட்டது. உயிர் எரிவாயு கலன்களை விறகு உபயோகம் குறைவதோடு, வெளி ஆற்றல் வினியோக சார்புத் தன்மை குறைந்துள்ளது. உயிர் எரிவாயு கழிவு மறுசுழற்சி செய்து பயிர்களுக்கு எருவாகிறது.



*விதை திருவிழாவில் பங்கேற்கும் பெண்கள்*

**செம்மை நெல் சாகுபடி மூலம் நெல் உற்பத்தியை மறுமீட்டெடுத்தல்**

ஐந்து பெண்கள் கொண்ட சுமார் 40 குழுக்கள் செம்மை நெல் சாகுபடி முறை மூலம் 200 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்தனர். இந்த முறையில் அதிக மகசூல் கிடைப்பதற்கு, சாதாரண முறையை விட 50% குறைவான விதைகளும், 40-50% குறைவான தண்ணீரும் பயன்படுத்தப்படுகிறது. கன்னியம்பெட்ட பஞ்சாயத்தை சேர்ந்த பாரம்பரிய பெண் விவசாயியான, தங்கம்மா, ஒரு ஏக்கர் நிலத்தில் 3500 கிலோ அரிசி உற்பத்தி செய்த இவர், மற்ற விவசாயிகளுக்கு உந்துதலாய் இருந்தது. பசுஞ்சாணம், மக்கு உரம் மற்றும் உயிர் எரிவாயு கழிவு ஆகிய அனைத்தும் கிடைப்பதால், உற்பத்தி முறை முழுவதும் இயற்கையாகவே பின்பற்றப்பட்டது. காய்கறிகளை போலவே, பெண்கள் மிகுதியாக இருக்கும் அரிசியனையும் மற்ற உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கு நல்ல விலைக்கு விற்கவும் முடிகிறது.

**முடிவு**

திறன் மற்றும் நம்பிக்கை வளர்ப்பின் மூலம் பெண்கள் சக்தி வாய்ந்தவர்களாக்குதல், இருக்கும் திறன்களை பயன்படுத்துதல், தேவையான இடத்தில் உதவி அளித்தல், அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்தல், அதில் ஒரு செயல்பாட்டின் கழிவுகள், மற்ற செயல்பாட்டிற்கு இடுபொருளாய் ஆகிவிடுதல் ஆகிய காரணிகள் இந்தத் திட்டம் வெற்றி பெற்றதற்கான முக்கிய காரணம். ஆதாரம் மறுசுழற்சி செய்வதனால் உற்பத்தி செலவு குறைகிறது, மேலும் வெளி ஆதாரங்களின் சார்புத்தன்மையும் குறைகிறது.

சத்துக்கள் உத்திரவாதத்தில் ஆச்சரியமூட்டும் மாற்றம், இந்த குடும்பங்களின் குழந்தைகள் மற்றும் பெண்களின் நிலைதான், இந்தத் திட்டத்தின் சிறந்த தாக்கங்களில் ஒன்று. முதல் முறையாக இந்த குடும்பங்களுக்கு பால் இருப்பு இருக்கிறது, மேலும் உறுப்பினர்களின் ஆரோக்கியம் உயர்ந்திருக்கிறது. உரத்திற்கு பயன்படுத்தும் பசுஞ்சாணம் போன்ற உப பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான உயிர் எரிவாயு ஆகியவை வேளாண் இடுபொருட்கள் மேல் விவசாயிகளின் பார்வை மாறியது.

மிக முக்கியமாக, சமூகத்திற்குள் பெண்களின் நிலை மற்றும் அவர்களின் சுய நம்பிக்கை அதிகரித்துள்ளது. தற்போது, உள்ளூர் அரசு பஞ்சாயத்து ராஜ் மையமும் இந்தத் திட்டத்தை எடுத்து மாநிலத்தில் பரவலாக நடத்தப்பட்டு வருகிறது.

■

**T K Omana**
Director,
Rural Agency for Social and Technological Advancement
(RASTA), Kamblakad.P.O.,Wayanad District.,
Kerala – 673122
www.rastaindia.org
E-mail: t.k.omana@gmail.com

மூலம்: லீசா இந்தியா, டிசம்பர் 2015, வால்யூம் 17, இதழ் 4